Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 020 | புதன்கிழமை | மார்கழி முதலாம் நாள் 16 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## அளவெட்டி மருத்துவமனை தற்காலிகமாக முடக்கம்!

யாழ்ப்பாணம், டிசெ.16

அளவெட்டி பிரதேச மருத்துவமனை தற்காலிகமாக முடக்கப் பட்டுள்ளதுடன், அங்கு 19

# மருதனார்மடம் கொத்தணி தொற்றாளர் அதிகரிப்பு

### நேற்று 19 பேருக்குத் தொற்று

### இதுவரை 58 பேர்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 16

மருதனார்மடம் கொரோனாக் கொத்தணியுடன் தொடர்புடைய 19 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களுடன் சேர்த்து மருதனார்மடம் கொரோனாக் கொத்தணியில் இதுவரை 58 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். 19

**மருதனார்மடம் கொத்தணி 58**

| | |
|---|---|
| உடுவில் | -16 |
| தெல்லிப்பழை | -12 |
| ஏழாலை | -06 |
| இணுவில் | -04 |
| சண்டிலிப்பாய் | -03 |
| அளவெட்டி | -02 |
| சுன்னாகம் | -02 |
| கீரிமலை | -02 |
| மானிப்பாய் | -02 |
| நல்லூர் | -02 |
| உரும்பிராய் | -01 |
| நவாலி | -01 |
| கொக்குவில் | -01 |
| சங்கானை | -01 |
| பண்டத்தரிப்பு | -01 |
| நாவற்குழி | -01 |
| காங்கேசன்துறை | -01 |

## மருதனார்மடம் சந்தைக்கு சென்றோருக்கு அறிவித்தல்

யாழ்ப்பாணம், டிசெ.16

கடந்த இரண்டு கிழமைகளுக்குள் மருதனார்மடம் பொதுச் சந்தைக்கு பொருள்கள் வாங்குவதற்குச் சென்றவர்கள் தங்கள் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினருடன் அல்லது கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு தகவல்களைத் தெரிவிக்க வேண்டும் என்று 19

## 23ஆம் திகதி விடுமுறை!

கொழும்பு, டிசெ.16

பாடசாலைகளுக்கு மூன்றாம் தவணை விடுமுறை எதிர்வரும் 19



## உயர்நீதிமன்றில் பெரும் தீ விபத்து!

கொழும்பு, டிசெ.15

கொழும்பு, புதுக்கடையில் அமைந்துள்ள உயர்நீதிமன்றத்தின் கட்டடத் தொகுதியில் நேற்று மாலை திடீரெனப் பெரும் தீ பரவியது. தீயைக் கட் 19

## ஆவணங்களுக்கு ஆபத்து இல்லை!

கொழும்பு, டிசெ.16

உயர்நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுப் பரவிய தீயால், உயர்நீதிமன்றத்திலுள்ள எந்த வொரு ஆவணத்துக் கும் பாதிப்பு ஏற்பட 19

## சமூகத் தொற்றை ஒப்புக்கொள்ளுங்கள்

அரசிடம் இடித்துரைத்தார் ஆளுந்தரப்பு எம்.பி. திஸ்ஸ

கொழும்பு, டிசெ.16

இலங்கையில் கொரோனா வைரஸ் தற்போது கொத்தணி 19

## மக்கள் அடங்காவிடில் நாடு முடங்க நேரிடும்!

*இராணுவத் தளபதி தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.16

பண்டிகை காலத்தில் மக்கள் அதிகளவில் வீதிகளில் இறங்கிச் செயற்பட்டால் நாட்டை முடக்க வேண்டிவரும். 19

## வீழ்ந்து நொருங்கியது பயிற்சி விமானம்!

விமானி உயிரிழப்பு

திருகோணமலை, டிசெ.16

திருகோணமலை, சீனன்குடாவில இருந்து நேற்றுக் காலை பறப்பை மேற்கொண்ட 19

## அரசியல் கைதிகள் என்று எவரும் தற்போது இல்லை

*கம்மன்பில சவால்!*

கொழும்பு, டிசெ.16

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கு மாறுகோரி தமிழ்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர் 15

## நேற்றும் 643 பேருக்கு தொற்று

19

## 2021 மார்ச்சுக்குள் மாகாணசபை தேர்தல்!

கொழும்பு, டிசெ.16

2021 மார்ச் மாதத்துக்கு முன்னர் மாகாணசபைத் தேர்தலை நடத்து வதற்கு அரசு எதிர் 19

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த் பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)

Mobitel Master unlimited
உங்களுக்கு விருப்பமான UNLIMITED பக்கேஜைத் தெரிவு செய்யுங்கள்
அழையுங்கள் 1717
UNLIMITED CALLS மாதாந்தம் ரூபா. 1500/- மட்டுமே
UNLIMITED CALLS & DATA மாதாந்தம் ரூபா. 3,999/- மட்டுமே
Sri Lanka Telecom Mobitel
Mobitel.lk/master

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன் newuthayan.com

# தமிழக மக்களையும் ஈழ மக்களையும் பிரிப்பதே இலங்கை அரசின் நோக்கம்

## கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, டிசெ. 16

**கடந்த நாற்பது வருடங்களுக்கும் மேலாக ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு உதவியாக இருக்கும் தமிழ் நாட்டு மக்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையில் விரிசலை ஏற்படுத்துவதே இலங்கை மற்றும் இந்திய அரசுகளின் எண்ணம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.**

இந்திய இழுவைப் படகுகளின் அத்து மீறிய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத்தீவில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கருத்துரைக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

மிகமோசமாக அழிக்கப்பட்டுள்ள தமிழர்களுடைய கடற்றொழில் போருக்குப்பின்னரான பத்து ஆண்டுகளிலும் தொடர்ச்சியான அழிவுகளைச் சந்தித்து வந்துள்ளது.

தமிழக உறவுகளுக்கும் ஈழத் தமிழ் மக்களுக்குமிடையில் நிரந்தரமான பகையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும் இலங்கை இந்திய அரசுகள் திட்டமிட்டவகையில் ஈழத்தமிழர்களையும் தமிழக மக்களையும் மோதவைப்பதற்காகவுமே இந்த அத்துமீறிய கடற்றொழில் செயற்பாடுகளை அனுமதித்துக்கொண்டிருக்கின்றனர்.

எமது மக்கள் முன்னேறி விடக் கூடாது என்பதுடன், இந்த மக்களை கையேந்தும் நிலைக்குக் கொண்டுவரவே கடற்றொழில் அமைச்சர் விரும்புகின்றார்.

அதனூடாக, அரசிடம் உதவிகளைப்பெற்று மக்களுக்குப் பிச்சை போடுவது போன்று இந்த மக்களுக்கு சில உதவிகளை வழங்குவதனூடாக தனது வாக்கு வங்கியைத் தக்கவைக்கவேண்டும் என்ற நோக்கிலேயே அவர் செயற்படுகின்றார் என்று தோன்றுகின்றது. என்றார். (த246,19)

# வேலைபெற்றுத்தருவதாக பணமோசடி: முன்னாள் இணைப்பாளர் கைதாகிப் பிணை

முல்லைத்தீவு, டிசெ. 16

வன்னித் தேர்தல் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் முன்னாள் இணைப்பாளர் வேலை பெற்றுத்தருகின்றேன் என்றுகூறி ஏமாற்றி பணமோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவரைப் பிணையில் விடுவித்த நீதிமன்று வழக்கை ஒத்திவைத்தது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்த காலத்தில் பலரிடம் வேலை பெற்றுத்தருகின்றேன் என்றுகூறி சந்தேகநபர், இருவரிடம் தலா 75 ஆயிரம் ரூபாவும் ஒருவரிடம் 50 ஆயிரம் ரூபாவும் பணம் பெற்றுள்ளார் என்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் கடந்த 12ஆம்திகதி முறையிடப்பட்டுள்ளது. அதன்படி மறுநாள் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவர் இரண்டு லட்சம் ரூபா ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டார். வழக்கு எதிர்வரும் மார்ச் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-19)

# வாள்வெட்டில் தேடப்பட்டவர் ஓமந்தையில் கைதானார்

## அலைபேசி உரையாடலில் கண்டறிவு

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ்ப்பாணத்தில் பல்வேறு வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்களை நடத்திவிட்டு தலைமறைவாகியிருந்தார் என்று குற்றஞ்சாட்டில் சுமன் என்று அழைக்கப்படும் நபர் ஓமந்தையில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் அவரைக் கைதுசெய்தனர்.

கடந்த செப்ரெம்பர் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் வைத்து தனுரொக் என்ற மானிப்பாய் இளைஞனை வாளால் வெட்டி கொலை முயற்சி செய்தமை, நீர்வேலியில் உள்ள தனுரொக்கின் நண்பனின் வீடு புகுந்து இளைஞனையும் தாயாரையும் தாக்கியமை, கச்சேரியில் ஊழியர் ஒருவரை வெட்டிக் காயப்படுத்தியமை உள்ளிட்ட பல வாள்வெட்டு வன்முறைகளுடன் பிரதான சந்தேகநபராக சுமன் தேடப்பட்டு வந்தார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

பணத்துக்காக வாள் வெட்டு வன்முறைகளில் தான் ஈடுபட்டேன் என்றும் சந்தேகநபர் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

அவர் யாழ்ப்பாணத்தில் மறைத்து வைத்திருந்தார் என்று கூறப்படும் வாள்கள் மற்றும் கைக்குண்டு என்பனவும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் ஓமந்தையில் தலைமறைவாகியிருந்தமை அலைபேசி உரையாடலின் மூலம் கண்டறியப்பட்டது. அதனடிப்படையில் அங்குசென்ற பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் விசாரணையின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-26)

# வலி.தென்மேற்கிலுள்ள சகல சந்தைகளிலும் இன்று பணிகள் நிறுத்தப்பட்டு தொற்றுநீக்கம்

## தவிசாளர் ஜெபநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16

வலி. தென்மேற்கு பிரதேசத்துக்கு உட்பட்ட சந்தைகள் அனைத்திலும் இன்று புதன்கிழமை வர்த்தக நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு சந்தைகள் முற்றுமுழுதாக தொற்றுநீக்கம் செய்யப்படவுள்ளன. அதுமட்டுமன்றி சந்தை வியாபாரிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைவருக்கும் இன்று முற்கூட்டிய பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. அனைவரையும் இதற்கு ஒத்துழையுங்கள் என்று வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது பிரதேசத்துக்குட்பட்ட அனைத்து போக்குவரத்து சாதனங்களுக்கும் தொற்றுநீக்கம் செய்யும் வசதி எமது பிரதேச சபையில் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறை தொற்றுநீக்கம் செய்யப்படும்போதும் தொற்றுநீக்கம் செய்யப்பட்டமையை உறுதிப்படுத்தி வாகனங்களில் எம்மால் 'தொற்றுநீக்கம் செய்யப்பட்ட வாகனம்' என்ற ஸ்ரிக்கர் ஒட்டப்படும். இதனை அனைத்து வாகனப் பாவனையாளர்களும் கருத்திற்கொண்டு செயற்படுங்கள்.

கொரோனா சமூகத்தொற்றாக பரவலடைந்து எமது பகுதிகளில் பெரும் சவாலாக முன்னெழுந்துள்ள வேளையில், நாம் ஒவ்வொருவரும் சமூகப்பொறுப்புடன் செயற்படவேண்டும்

மருதனார்மடம் சந்தையில் ஏற்பட்ட தொற்றைத் தொடர்ந்து எமது பகுதிகளில் பெரும்பாலும் பல இடங்களில் இந்தத்தொற்று பரவலடைந்துள்ளது. அத்துடன் அயற்பிரதேசம் என்றதன் அடிப்படையில் எமது பகுதி மக்களுக்கு மருதனார்மடம் சந்தையுடன் தொடர்பு காணப்படுகின்றது. அத்துடன் எமது பகுதி உற்பத்தியாளர்களுக்கும் சந்தை வியாபாரிகளுக்கும் நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றமையால் முன் எச்சரிக்கையாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. - என்றார். (த)

# காற்றுசக்தி, சூரிய வெப்பம், இயற்கை வாயுவை மின் கட்டமைப்புடன் இணைக்க ஜனாதிபதி ஆராய்வு

கொழும்பு, டிசெ. 16

மீள்பிறப்பாக்க சக்திவள மூலங்களான காற்றுசக்தி, சூரிய வெப்பம் மற்றும் இயற்கை வாயு போன்றனவற்றை மின் கட்டமைப்புடன் விரைவாக இணைப்பதற்கான சாத்தியம் குறித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆராய்ந்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மின் உற்பத்தி தொடர்பான கலந்துரையாடலில் இது பற்றி ஆராயப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

உலகின் பல நாடுகள் மின் உற்பத்தியில் மீள்பிறப்பாக்க சக்தி வளத்தைப் பயன்படுத்துவதை நோக்கி நகர்கின்றன.

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை திட்டத்தின் படி 2030 ஆம் ஆண்டாகும்போது மீள்பிறப்பாக்க சக்தி மூலங்களிலிருந்து மொத்த மின்சார தேவையில் 70வீதத்தைப் பூர்த்தி செய்ய அரசு எதிர்பார்க்கிறது.

மீள்பிறப்பாக்க சக்தி உற்பத்தி குறுகிய கால இலக்குகளுடன் முறையாகவும் விரைவாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்கால அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்துவதில் அதிகரித்து வரும் மின்சக்தி தேவையை மீள்பிறப்பாக்க சக்தி மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்வது அரசின் நோக்கமாகும். அதன் முதல் கட்டத்தின் கீழ் மன்னார் தீவில் நிறுவப்பட்ட காற்றாலை மின் உற்பத்தி நிலையம் பிரதான மின் கட்டமைப்புக்கு 30 மெகா வோட்டினை வழங்குகின்றது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் அந்த திறன் 100 மெகாவோட்டாக அதிகரிக்கப்படும். சுன்னாகம் மற்றும் பூநகரி பிரதேசங்களை மையப்படுத்தியும் காற்றாலைகள் அமைக்கப்படும். சூரிய சக்தி மற்றும் இயற்கை வாயுவைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் மெகாவோட் எண்ணிக்கையை படிப்படியாக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

திட்டங்களை செயல்படுத்தும்போது தனியார் துறை தொழில் முயற்சியாளர்களுக்கு ஏற்படும் தடைகளை நீக்கி அரசு அனைத்து சலுகைகளையும் வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறினார். ஏனைய நிறுவனங்களிடமிருந்து முன் ஒப்புதல் பெற்று முதலீட்டாளர்களுக்கு வழங்கும் பொறுப்பு மின்சக்தி அமைச்சுக்கு வழங்கப்பட்டது.

முதலீட்டு சபையும் மின்சக்தி அமைச்சும் கூட்டாக முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் கண்டு திட்டங்களை விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சூரிய மின் உற்பத்தி பல திட்டங்களின் கீழ் இடம்பெறுகிறது. ஒரு லட்சம் சமுர்த்தி குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு வீடுகளின் கூரைகளில் சூரிய தகடுகளை அமைத்து அவர்களுக்கு வருமானம் கிடைக்கும் வகையில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். இந்த நோக்கத்துக்காக ஒரு வீட்டுக்கு ரூ. 8 லட்சம் ரூபா செலவை அரசு ஏற்க வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார் என்று ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

# 22 இந்திய மீனவர்களுக்கும் விளக்கமறியல் 18 ஆம் திகதிவரை

யாழ்ப்பாணம், டிசெ. 16

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறை கடற்படை தனிமைப்படுத்த நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 22 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 18 ஆம் தேதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பில் குறித்த 22 இந்திய மீனவர்களும் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்தனர். (த-25)

# முல்லைத்தீவு மீனவர்கள் நேற்று கவனவீர்ப்புப் போர்

**முல்லைத்தீவு, டிசெ. 16**
**இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, முல்லைத்தீவு மீனவர்கள் அடைமழையிலும் பெரியளவில் திரண்டு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இழுவைப்படகுகளின் பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரையில் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.**





முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் சமாசம், மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், முல்லைத்தீவு பிரதேச வர்த்தக சங்கம், மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், கரைதுறைப் பற்று பலநோக்கு கூட்டுறவு சங்கம், பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவு சங்கம், முல்லைத்தீவு சிகை அலங்கரிப்பாளர் சங்கம், கரைதுறைப்பற்று கிராமிய அபிவிருத்தி சங்கம் ஆகியன போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்கின.
முல்லைத்தீவு கடற்கரையில் இருந்து ஆரம்பமாகிய கவனவீர்ப்புப் பேரணி கடற்கரை வீதிவழியாக மாவட்டச் செயலகம் வரை சென்றடைந்தது. மாவட்டச் செயலர் க.விமலநாதனிடம் கடற்றொழிலாளர்கள் மனுவொன்றையும் வழங்கினர்.
மனுவின் பிரதிகள் கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர், கடற்தொழில் அமைச்சர், வடமாகாண ஆளுநர், பிரதமர், ஜனாதிபதி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், சாள்ஸ் நிர்மலநாதன், வினோநோகராதலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சாந்தி சிறீஸ்கந்தராசா, முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், ஆண்டிஐயா புவனேஸ்வரன், மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் எனப்பலரும் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர். (ம-19,113,246)

## ஜனாஸாக்களை எரிக்க திருமலையில் எதிர்ப்பு

திருகோணமலை, டிசெ.16
இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம் சமூகத்தவர்களது சடலங்களை தகனம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலை மாவட்ட சமூகத்தவர்களால் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
முஸ்லிம் சமூகத்தவர்களது மத மற்றும் கலாசார விழுமியங்களுக்கு மதிப்பளித்து கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களது சடலங்களைப் புதைப்பதற்கு அரசு அனுமதி வழங்க வேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைத்து இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது திருகோணமலை கடற்கரைக்கு முன்பாகவுள்ள காந்தி சிலையைச் சுற்றி அமையப்பெற்ற வேலியில் வெண்ணிறப் பட்டிகளை கட்டி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். (ற-இ)

## முன்னாள் பிரதி அமைச்சரான மஹரூப் உட்பட இருவர் கைது

கொழும்பு, டிசெ. 16
முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹரூப் உட்பட இருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.
2015 - 2019க்கு இடையில் லங்கா சதொசவின் வாகனங்களை தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டிலேயே அப்துல்லா மஹரூப் கிண்ணியாவில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். (ம-இ)

## பள்ளிமுனை, குஞ்சுக்குளத்தில் பெரும்தொகை மஞ்சள் மீட்பு

### மூவர் கைது

மன்னார், டிசெ.16
மன்னார் பள்ளிமுனைப் பகுதியில் வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 560 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளை வன்னிப் பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் மன்னாரைத் தளமாகக் கொண்டுள்ள 54 ஆவது படைப்பிரிவின் படைவீரர்கள் கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த மஞ்சள் 9.3 மில்லியன் ரூபா பெறுமதியானது என்று தெரிவிக்கப்பட்டது.
கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.
இதேவேளை, 5.34 மில்லியன் ரூபா பெறுமதியான 890 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் 15ஆவது கெமுனு வாட்ச் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.
குஞ்சுக்குளம் வீதித் தடையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது சந்தேகத்தின் பேரில் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சந்தேக நபர்கள் இருவரும் மன்னாரில் இருந்து கல்முனை பிரதேசத்தை நோக்கி மஞ்சளை லொறி ஒன்றினுள் வைத்துக் கடத்திச்செல்லும் வேளையிலேயே கைது செய்யப்பட்டனர். (ப)

## சடலங்கள் எரிப்பது கண்டனத்துக்குரியதே

*மாந்தை சபைத் தவிசாளர் வலியுறுத்து*

கொழும்பு, டிசெ.16
கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் எரிப்பது கண்டனத்துக்குரியது என்று மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் ம.தயானந்தன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வரும் வேளையில் சிறுபான்மை மக்களுக்கு இடையிலும் அரச இயந்திரத்துக்கு இடையிலும் பல கருத்துவேறுபாடுகள் காணப்படுகின்றன.
பல சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேளையில் 20 நாள்களாக சிசுவின் மரணம் என்பது அனைத்து மக்களையும் வருந்த வைக்கின்ற செயலாக இருக்கின்றது.
ஒரு மாதத்துக்கு உட்பட்ட குழந்தை இறந்தால் வெள்ளைத் துணியில் போர்த்து கையில் கொண்டு சென்று அடக்கம் செய்வதுதான் இங்குள்ள அனைத்து இனத்தின் முறையாக இருக்கின்றது. 20 நாள்களேயான சிசுவின் உடலை எரித்ததை எண்ணி இலங்கையில் வாழ்கின்ற மூவின மக்களும் கண்கலங்குகின்றார்கள். இதற்கு மாற்று வழியை பிரதமர், சுகாதாரத் துறையினர் ஒரிரு தினங்களுக்குள் முடிவைத் தரவேண்டும் - என்றார். (ஐ-19)



## மாற்றுத்திறனாளிகளுக்கான தொழில் முயற்சிகள் ஆரம்பம்

மன்னார்,டிசெ.16
மாந்தை மேற்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தொழில் முயற்சிகளான நலச்சுவையம் மற்றும் தோட்டம் ஆகியன நேற்றுத் திறக்கப்பட்டன.
மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டி மேல் முயற்சிகளை ஆரம்பித்தார்.
திருமதி வேலு தவமணியால், மாற்றுத்திறனாளிகள் அமைப்புக்கு அன்பளிப்புச்செய்யப்பட்ட காணியில், ஒருங்கிணைந்த பண்ணை முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தோட்டம் மற்றும், மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் சிறு குழுக்களுக்காக வொய்ஸ் நிறுவனத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட குழு நிதிகளை ஒன்றிணைத்து அமைக்கப்பட்ட நலச்சுவையகம் ஆகியன திறக்கப்பட்டன. (க-56)

## மாகாணத் தேர்தலிலும் பலம்காட்டும் பெரமுன

மாகாண சபை முறைமை நாட்டுக்கு அவசியம். நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலிலும் பொதுஜன பெரமுன அமோக வெற்றிபெறும் என துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார். பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த அரசாங்கத்தில் அரசியல் நோக்கங்களுக்காக மாகாண சபை முறைமை பலவீனப்படுத்தப்பட்டது. மாகாண சபை முறைமை நாட்டுக்கு அவசியம். மாகாண சபைத் தேர்தலில் பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்று மாகாண சபை முறைமையை பலப்படுத்தும் - என்றார். (ம-இ)

## வவுனியாவில் விபத்து முதியவர் காயம்

வவுனியா,டிசெ.16
பஸ்ஸுடன் சைக்கிள் மோதியதில் முதியவர் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்த விபத்து வவுனியா வைரவப்புளியங்குளம் ரயில் நிலைய வீதியில் நேற்று இடம்பெற்றது.

ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிக்கொண்டு பஸ் பயணித்துக்கொண்டிருந்த சமயத்தில், சைக்கிளில் வந்த முதியவரை பஸ் மோதித்தள்ளியது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதில் காயமடைந்த முதியவர் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-18)





இலங்கையின் பிரபல கிரிக்கெட் வீரர் சனத் ஜயசூரியவின் தந்தையின் பூதவுடலுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்றுமுன்தினம் பிற்பகல் அவரது வீட்டில் வைத்து இறுதி மரியாதை செலுத்தினார். (ற-இ)

## சிறுமி துஷ்பிரயோகம் : 32 வயது நபர் கைது

15 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என மின்னேரியா பொலிஸார் தெரிவித்தனர். வவுனியாவைச் சேர்ந்த 32 வயதான ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந் நபர் சிறுமியின் வீட்டில் வேலை செய்பவர். பெற்றோர் இல்லாத நேரத்தில் சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார். சிறுமி மருத்துவப் பரிசோதனைக்காக பொலநறுவை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-இ)

# நல்லடக்க உரிமையை அரசு மறுக்க முடியாது

## ஹக்கீம் மாலைதீவுக்கு கடிதம்

**கொழும்பு,டிசெ.16**
**கொரோனாவால் உயிரிழந்த சடலங்களை நல்லடக்கம் செய்ய முன்வந்துள்ள மாலைதீவு அரசுக்கு நன்றி. எனினும் அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி இலங்கையிலேயே நல்லடக்கம் செய்யப்படுவதற்கான அடிப்படை உரிமையை மறுப்பதற்கு அரசு மேற்கொள்ளும் எல்லாவிதமான முயற்சிகளையும் எதிர்த்து நிற்போம்.**

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், இலங்கையிலுள்ள மாலைதீவு உயர்ஸ்தானிகர் ஒமர் அப்துல் ரஸ்ஸாக்கிக்கு மின்னஞ்சலில் கடிதமொன்றை அனுப்பியுள்ளார். இது தொடர்பில் அவர் தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளதாவது,

கொவிட் - 19 இனால் இறப்பவர்களை எரிப்பது மட்டுமே என்ற அரசின் ஒரே கொள்கையின் விளைவாக, முஸ்லிம் சமூகம் பாரதூரமான மன உளைச்சலுக்கு உள்ளாகியிருக்கின்றது. இந்த நிலையில் எமது சமூகத்தின் மீது தங்கள் நாட்டு அரசின் அனுதாப உணர்வு தாராள சிந்தையின் வெளிப்பாடாகும்.

எனினும் நீதி நியாயமற்ற முறையில் எமது அரசு நடந்துகொள்வதை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரி வருகின்றோம். அதைவிட எங்களது அரசியல் யாப்பில் உத்தரவாதமளிக்கப்பட்ட சமத்துவமான அடிப்படை உரிமைகளை மீறுகின்ற செயற்பாடாகவும் அது அமைந்துள்ளது- என்றுள்ளது. (க-இ)

## தங்க நகைகள் கொள்ளை; முன்னாள் இராணுவ தளபதி கைது



கொழும்பு, டிசெ.16
மோட்டார் சைக்கிளில் சென்று பெண்களின் தங்கச் சங்கிலிகளைக் கொள்ளையிட்டுச் சென்ற முன்னாள் இராணுவத் தளபதியான லெப்டினன்ட் கேணல் ஒருவர் அத்துருகிரிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந் நபர் மாலபே பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையாவார். இவர் கொள்ளையடித்த தங்க நகைகளை அடகு பிடிக்கும் நிலையமொன்றில் அடகு வைத்துள்ளார்.

இவ்வாறு அடகு வைத்த 60 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ந-இ)

## காலி பொலிஸ் பிரிவில் 17 புதிய தொற்றுக்கள்



காலி, டிசெ.16
காலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் 17 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் ஒரு வயதுச் சிறுவன், மற்றும் ஐந்து ஆண்கள் மற்றும் 11 பெண்கள் அடங்குகின்றனர். அதன்படி, இந்த ஏழு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இருந்தும் பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 72 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, கொரோனா அச்சுறுத்தல் காரணமாக காலியில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் 18 ஆம் திகதி வரை மூட தெற்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார். (ந-இ)

## தொற்றாளர்களின் வீடுகளில் தொற்று நீக்கல் நடவடிக்கை

வவுனியா, டிசெ.16
வவுனியாவில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானவர்களின் வீடுகளில் தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வவுனியாவில் மாவட்டத்தில் சாம்பைக்குளம் பகுதியில் அதிகமாக கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன் காரணமாக வவுனியா நகரின் கற்குழி முதலாம் ஒழுங்கை , திருநாவற்குளம் 3ஆம் ஒழுங்கை என்பன நேற்றுமுன்தினம் முதல் சுகாதாரப் பிரிவினரால் முடக்கப்பட்டு அப்பகுதி மக்கள் அனைவரும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று திருநாவற்குளத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் , கற்குழிப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஆகியோரின் வீடுகள் வவுனியா நகரசபையினரால் தொற்று நீக்கம் செய்யப்பட்டது. (ஐ-110)



## மீட்கப்பட்ட வாள்கள் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கையளிப்பு

கொழும்பு, டிசெ.16
உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து சில வழிபாட்டுத் தலங்களில் கைப்பற்றப்பட்ட வாள்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டன. முஸ்லிம் மத விவகார முன்னாள் அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் இந்த வாள்களை நேற்று ஆணையகத்துக்கு வழங்கினார். இதேவேளை, முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரியாஜ் பதியுதீன் நேற்று ஜனாதிபதி ஆணையத்தில் முன் முன்னிலையாகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பற்றியெரிந்த நீதி

காற்சிலம்பைக் களவாடியவன் என்று பொய்க்குற்றம் சாட்டப்பட்டு, கண்ணகியின் கணவன் கோவலனுக்கு பாண்டிய மன்னன் மரண தண்டனை விதித்தான். கோவலனின் தலை வெட்டப்பட்டு தண்டனை நிறைவேற்றப்பட்டது. கணவனின் கதி அறிந்த கண்ணகி ஒற்றைக் காற்சிலம்போடு மன்னனின் அரசவைக்குச் சென்றாள். தன் சிலம்பை உடைத்து கணவன் கள்வன் அல்லன் என்பதை நிரூபித்தாள். பாண்டிய மன்னன் தன் நீதி பிழைத்ததை அறிந்து சபையிலேயே உயிர்நீத்தான். கண்ணகியின் கோபத்தால் எழுந்த பெருநெருப்பு மதுரை நகரையே எரித்தது. இது கண்ணகியின் கதை.

அதேபோன்று நேற்றும் இலங்கையில் நீதி எரிந்தது. இலங்கையின் நீதித்துறையின் அடையாளமான உயர்நீதிமன்றத் தீ விபத்து தான் சமூக வலைத்தளங்களில் நேற்று முழுதும் பேசுபொருள். ஏற்கனவே இந்த இரும்பாட்சியில் நீதித்துறை தன் சுயத்தை இழந்துவிட்டது என பல தரப்புகளும் குரலெழுப்பி வரும் நிலையில், இந்தத் தீ விபத்து நிகழ்ந்துள்ளது. உயர் நீதிமன்றத்தை புதிய கட்டடத்துக்கு நகர்த்த கோத்தாபய அரசு முயன்று வருகின்றது. ஆனால் அதற்கு கடும் எதிர்ப்பு எழுந்த நிலையிலேயே நேற்றைய தீ விபத்தும் நிகழ்ந்துள்ளமை பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

இலங்கையில் அதியுச்ச பாதுகாப்பு நிறைந்த, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த உயர் நீதிமன்றுக்குள் எப்படித் தீ விபத்து நிகழ்ந்தது என்பது பற்றி இன்னமும் சரியான தகவல்கள் இல்லை. அந்தக் கட்டடம் கருகி, பெரும் புகை மண்டலம் பரவிய பின்னரேயே அதனை அணைப்பதற்கான நடவடிக்கைகள் மந்தகதியில் எடுக்கப்பட்டிருந்தன. இந்தத் தீயில் பல வழக்கு ஆவணங்களும் எரிந்து நாசாமாகி இருக்கலாம் என நம்பப்படுகின்றது. இந்த நிலை நாட்டின் தலையெழுத்தையே மாற்றக்கூடிய பல வழக்குகளில் தாக்கம் செலுத்தவும் கூடும். இப்படி அதிமுக்கிய வழக்கு ஆவணங்கள் பாதுகாக்கப்படும், இலங்கை நீதித்துறையின் மையமான உயர் நீதிமன்றத்தின் பாதுகாப்பு, தீப்பிடிக்கக் கூடியளவு அஜாக்கிரதையாகவா இருக்கிறது?

இதுவரை எந்தவொரு ஆட்சியிலும் இல்லாதளவுக்கு இப்போது அரசுக்கு சாதகமாகவே எல்லா வழக்குகளிலும் தீர்ப்புகள் வருகின்றன. உதாரணமாக படுகொலையாளிகள் என்று கைதுசெய்யப்பட்ட பிள்ளையான் போன்றவர்களுக்கு பிணை வழங்கப்படுகையில், புலிகளுக்கு உதவி செய்தார்கள் என்ற சந்தேகத்தில் பிடிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளோ பல தசாப்தங்கள் தாண்டியும் சிறைக்குள்ளேயே வாடுகின்றார்கள். முஸ்லிம் தீவிரவாதிகளின் படத்தைப் போட்டு கவிதை நூலை வெளியிட்டார் என கவிஞர் ஒருவர் சிறைக்குள் தள்ளப்பட, சிங்களத் தீவிரவாதத்தை பகிரங்கமாகக் கக்கி வரும் ஞானசார தேரர் போன்றவர்கள் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்படுகின்றனர்.

கொடூரக் குற்றங்கள் புரிந்த அரசியல்வாதிகள் கூட விடுதலையாகிக் கொண்டிருக்கையில், தமக்கு பி.சி.ஆர் சோதனை செய்யவேண்டுமென நியாயமான கோரிக்கையை முன்வைத்த கைதிகள் ஈவிரக்கமின்றி, சுட்டுக்கொல்லப்படுகின்றனர். இறந்தவர்களை நினைவேந்த நீதியின் பெயரால் தமிழினத்துக்கு தடை போடும் அரசு, கலவரங்களைத் தூண்டும் நிகழ்வுகளுக்கு அனுமதியை அள்ளி வழங்குகின்றது. நீதியின் தராசுகள் தாறுமாறாக ஏறி இறங்கிக் கொண்டேயிருக்கின்றன. போதாக்குறைக்கு இப்போது நீதிமன்றுக்குள்ளேயே நெருப்பெரிந்து, ஏதோ துர்க்குறியைக் காட்டத் தொடங்கியுள்ளது. பாவம், நீதி!

# 395 பாடசாலைகள் வடக்கில் செயற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.16



**வடக்கு மாகாணத்தில் கொரோனா அச்சம் காரணமாக 395 இடைநிலை பாடசாலைகளே நேற்று இயங்கின என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் உதயகுமார் தெரிவித்துள்ளார்.**

மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் 535 இடைநிலைப் பாடசாலைகள் உள்ளன. அவற்றில் நேற்று 395 பாடசாலைகள் இயங்கின. வவுனியா தெற்கு வலயத்தில் 5 பாடசாலைகள் கொரோனாத் தொற்று காரணமாக மூடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 69 பாடசாலைகளும், வலிகாமம் கல்வி வலயத்தில் 66 பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. பி.சி. ஆர் முடிவுகளின் அடிப்படையில் அடுத்த வாரமளவில் பாடசாலைகளைத் திறப்பதற்கு ஆலோசிக்கின்றோம்.
அத்துடன் தரம் 6 முதல் 11 மாணவர்களுக்கான செயல் அட்டைகள் மற்றும் சூம் செயலி மூலம்கற்றல்நவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. யுரியூப் மற்றும் இணையம் வழியாக மேலதிக கற்றல் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன - என்றார் . (க-7)

## இலங்கை அரசால் நாளாந்தம் அகற்றப்படுகின்றன காடுகள்

### ஐ.தே.க குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.16
நாட்டில் சுற்றுச்சூழல் பாதிப்பு நாளாந்தம் மூன்று ஏக்கர் காடுகள் அகற்றப்படும் அளவுக்கு அதிகரித்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார். அத்தோடு இந்த நிலங்கள் அகற்றப்பட்டு பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்படுகின்றன எனவும் அவர் குற்றம் சாட்டினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
குறிப்பாக மஹா ஓயாவில்



சமீபத்தில் 600 ஏக்கர் காடு அகற்றப்பட்டு அவை பன்னாட்டு நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட உள்ளது இதுபோன்ற செயல்களால் தற்போதைய அரசாங்கம் பின்னடைவைச் சந்தித்துள்ளது. விரைவில் ஐக்கிய தேசியக் கட்சி புதிய அரசியல் சக்தியாக மாறும் என்றார். (ப)

## கவனத்தை ஈர்க்கும் கம்பஹா சிறுவன்!

*முற்பிறப்புத் தகவல்களை வெளியிடுகின்றானா?*

யாழ்ப்பாணம், டிசெ. 16
கம்பஹா மினுவாங்கொட பகுதியில் வசிக்கும் 7 வயதேயான சிறுவன் ஒருவன் தேசிய அளவில் அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளான். அவன் தன் முற்பிறப்புத் தொடர்பான தகவல்களை வெளியிட்டு வருகின்றான் என்றும் பலரும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.
இந்த சிறுவனின் கருத்துக்கள் ஆச்சரியமானவை. அவை கற்பனையாகத் தெரிந்தாலும் அந்த சிறுவன் விண்வெளிப் பயணம் பற்றியும் விண்வெளி ஓடம் சூரியனைக் கடந்து செல்லும் விதத்தையும் விபரிக்கின்றான். அத்துடன் விண்வெளி ஓடம் தீப்பிடித்து பாலைவனத்தில் விழுந்தது குறித்தும் விபரிக்கின்றான். இதனைவிட ஆச்சரியம் அந்த சிறுவன் ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளைச் சரளமாக பேசுகிறான். சிங்களத்தில் கேட்கும் கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் பதிலளிக்கின்றான்.
2003ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி கொலம்பியாவின் விண்வெளி ஓடம் அமெரிக்காவின் டெக்சாஸில் உள்ள பாலைவன பிரதேசத்தில் எரிந்து விழுந்தது. அதில் இந்திய வீராங்கனை கல்பனா சாவ்லா உயிரிழந்தார். இதனால் குறித்த சிறுவன் சாவ்லாவின் மறுபிறவி என்று பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். (ம-இ)

## வவுனியா தொற்றாளர்கள் கிளிநொச்சிக்கு

வவுனியா,டிச.16
வவுனியாவில் தொற்றாளர்களாக இனம் காணப்பட்ட 7 பேரும் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி தனிமைப்படுத்தல் நிலையத் துக்கு அனுப்பப்பட்டுள்ள னர்.
அத்துடன் இவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-110)

## 70 பேருக்கும் தொற்றில்லை

சாவகச்சேரி,டிசெ.16
நாவற்குழி கிழக்கில் தனிமைப்படுத்தப்பட்ட 70 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்படவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.
அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் மருதனார்மடம் சந்தைக்குச் சென்றவேளையில், அங்கு மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றான பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது.
இதனையடுத்து அங்கு சென்ற சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் குறித்த நபரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் அவர் சென்ற அயலவர்கள் என 70 பேரைத் தனிமைப்படுத்தி, எழுமாற்றான பரிசோதனைகளை மேற்கொண்டனர்.
பரிசோதனையில் பெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டன. ஆய்வுகளின் போது 70 பேருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# அத்துமீறும் இந்திய மீனவரை தடுக்க நடவடிக்கை எடுங்கள்

## வடக்கு கடற்றொழிலாளர் இணையம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.16

**இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறித் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை கட்டுப்படுத்த வேண்டும் என இலங்கை மற்றும் இந்திய அரசிடம் வடமாகாண கடற்தொழிலாளர்கள் இணையம் கோரிக்கை விடுத்துள்ளது.**



மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மனு யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதுவர் அலுவலகத்திலும், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மேலதிக செயலரிடமும், இணையத்தால் நேற்று கையளிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக இணையத்தில் தலைவர் சுப்பிரமணியம் தெரிவித்ததாவது;

இலங்கை கடற்பரப்புக்குள் தொடர்ச்சியாக இந்திய மீனவர்கள் அத்துமீறி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் வடபகுதி மீனவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். இவ்வாறான நிலைமையில் கடல் வளத்தையும் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய இலங்கை அரசிடம் பல தடவைகள் கோரிக்கைகள் விடுத்திருந்தோம்.

இந்தப் பிரச்சினை இதுவரையில் தீர்க்கப்படவில்லை. இதனால் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். அந்த மீனவர்களின் போராட்டத்துக்கு நாமும் ஆதரவை வழங்குவதுடன் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என கோரி நிற்கின்றோம் என்றார். (ப-20,7)

## மேலும் 122 கைதிகளுக்கு கொரோனாத் தொற்று


கொழும்பு, டிசெ.16

மேலும் 122 கைதிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 87 ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 103 பேர் சிறைச்சாலை அதிகாரிகள் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது. (ஐ-இ)

## மாஸ்க் அணியாத 9 பேருக்கு தண்டம்

சாவகச்சேரி,டிசெ.16



கொரோனாத் தொற்று பரம்பல் அதிகரித்து வரும் நிலையில், பொது இடங்களில் முகக்கவசம் அணியாமல் மற்றும் நாடியில் முகக்கவசத்தை அணிந்து நடமாடிய 9 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தண்டம் விதிக்கப்பட்டது.

தொற்று நோயை ஏற்படுத்தக்கூடிய வகையில் நடமாடினார் என குற்றம் சாட்டி சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு நேற்று எடுக்கப்பட்டன. குறித்த நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டது.

கொரோனாத் தொற்றை ஏற்படுத்தும் வகையில் முகக்கவசத்தை முறையாக அணியாமல் நடமாடுபவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வரை தண்டம் அல்லது ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்படுமென அரசால் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## சபை அமர்வில் குழப்பங்கள் உறுப்பினர்கள் வெளிநடப்பு!

கிளிநொச்சி, டிசெ. 16

கரைச்சி பிரதேச சபை அமர்வில் இரு வேறு சந்தர்ப்பத்தில் அமைதியின்மை ஏற்பட்டமையால் உறுப்பினர்கள் சிலர் வெளிநடப்புச் செய்தனர்.

கரைச்சி பிரதேச சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் உரையாற்றும்போதே இரு வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறு அமைதியின்மை ஏற்பட்டது. குறித்த உறுப்பினர் தனது உரையில் பிரதேசவாதம் பேசியதாக தெரிவித்தே அமைதியின்மை ஏற்பட்டது. அத்துடன் சுயேச்சைக் குழு உறுப்பினரை நீ என்று ஒருமையில் விழித்தார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. (ம-6)



## வவுனியாவில் தொற்று நீக்கம்

வவுனியா,டிசெ.16

வவுனியா, சாளம்பைக்குளம் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதையடுத்து முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் தொற்று நீக்கும் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, சாளம்பைக்குளம் பகுதியில் வசிக்கும் தாய் மற்றும் மகள் ஆகிய இருவரும் கொழும்பு சென்று வந்த நிலையில் அவர்களுக்கு கொரோனாத் தொற்று இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், குறித்த கிராமத்தில் இருந்து சில மாணவர்கள் முஸ்லிம் மகாவித்தியாலயம் பாடசாலையில் கற்று வருகின்றனர்.

இந்நிலையிலேயே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறித்த பாடசாலையிலும் தொற்று நீக்கம் செய்யும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. (ஐ-110)

## போதையில் சாரத்தியம் 6 பேருக்குத் தண்டம்

போக்குவரத்து விதிமுறைகளை மீறி மது போதையில் வாகனம் செலுத்திய ஆறுபேருக்கு ஒரு லட்சத்து 52 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றால் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. மதுபோதையில் வாகனம் செலுத்திய ஐவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும், மது போதையுடன் வாகன வரிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு 27 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டமாக விதிக்கப்பட்டது. (ஐ-9)

### கொழும்பு துறைமுகம்

## கிழக்கு முனையம் தொடர்பில் விரைவில் இறுதியான முடிவு!

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பில் பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட இரண்டு நிபுணர் குழுக்களின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் 2014ஆம் ஆண்டுக்குப் பிறகு அபிவிருத்தி செய்யப்படவில்லை. 2005ஆம் ஆண்டு காலப் பகுதியில் துறைமுகத்தில் ஒரு முனையம் மாத்திரமே அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் கொழும்பு துறைமுகம் உட்பட பிரதான துறைமுகங்கள் குறுகிய காலத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டன. நல்லாட்சி அரசு கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் வழங்க தீர்மானித்து ஆரம்பகட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. உள்ளூர் முதலீட்டாளர்களால் தற்போதைய சூழ்நிலையில் முனையத்தை அபிவிருத்தி செய்ய முடியாது என்ற காரணியாலேயே கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க ஆரம்ப கட்டத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இது தொடர்பில் ஆராய்வதற்காக இரண்டுகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்களின் முடிவுகளை வைத்து இறுதி முடிவு எடுக்கப்படும்-என்றார். (ம-இ)

# கார் - ஹை-ஏஸ் மோதல்: மூவர் மருத்துவமனையில்

கொடிகாமம், டிசெ. 16

கார் -ஹை-ஏஸ் வாகனங்கள் நேருக்கு நேர் மோதியதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்த விபத்து நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் சங்குப்பிட்டி கேரதீவில் இடம்பெற்றது.

பூநகரி பகுதியில் இருந்து யாழ் நோக்கி வந்த காரும் யாழிலிருந்து பூநகரி நோக்கிச் சென்ற ஹை-ஏஸும் மோதின. இந்த விபத்தில் காரில் சென்ற இரு பெண்களும் சாரதியும் காயமடைந்தனர். (ம-159)



# தனிமைப்படுத்தப்பட்டோருக்கு 10 ஆயிரம் ரூபா உணவுப் பொதி

## தென்மராட்சியில் வழங்கப்படுகிறது

சாவகச்சேரி, டிசெ. 16
கொரோனாவால் பாதிக்கப்பட்ட நிலையில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு பிரதேச செயலகங்களால் தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலக பிரிவுகளிலும் தனிமைப்படுத்தலுக்கு உள்ளான பல குடும்பங்கள் காணப்படுகின்றன. இவர்களுக்கு 2 கட்டங்களாக தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களே வழங்கப்படுகின்றன.

தென்மராட்சி பிரதேசத்தில் தென்மட்டுவில், மட்டுவில் மத்தி, கைதடி மத்தி, கோயிற்குடியிருப்பு, சந்திரபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கே அந்தப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. ஏழாவது தொகுதியினருக்கான முதலாவது கட்ட உலர் உணவுப் பொதிகளும் மரக்கறி வகைகளும் இவ்வாறு நேற்று பிரதேச செயலக அலுவலர்களால் வழங்கப்பட்டன. மழை வெள்ளத்தால் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாவற்குழி கிழக்கில் மேலும் 27 குடும்பங்களைச் சேர்ந்த 74 பேர் தனிமைப்படுத்தப்பட்டு எட்டாவது தொகுதியினராக கணக்கிடப்பட்டுள்ளனர். (ப-9)



## பள்ளத்தில் வீழ்ந்து வாகனம் விபத்து

வவுனியா, டிசெ. 16
வவுனியாவில் மின்சாரத் தூண்களை ஏற்றிச் சென்ற வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை வவுனியா செட்டிக்குளம் பிரதான வீதியில் உலுக்குளம் பகுதியில் இடம்பெற்றது. வீதி திருத்தும் பணிகளுக்காக வெட்டப்பட்ட பள்ளத்தில் வீழ்ந்தே அந்த வாகனம் விபத்துக்குள்ளானது. வாகனத்தை மீட்கும் நடவடிக்கையில் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (ப-18)

## சட்டவிரோத தத்தெடுப்பு: சுவிற்சர்லாந்து வருத்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 16
இலங்கையிலிருந்து சட்டவிரோத தத்தெடுப்புகளை நிறுத்தத் தவறியமைக்கு சுவிற்சர்லாந்து அரசு வருத்தம் தெரிவித்துள்ளது.

1980களில் இலங்கையில் இருந்து குழந்தைகளை சுவிட்ஸர்லாந்து நாட்டினர் சட்டவிரோதமாக தத்தெடுத்தமை குறித்த முறைப்பாட்டிற்கே சுவிற்சர்லாந்து அரசு தனது வருத்தத்தைத் தெரிவித்தது.

சில சந்தர்ப்பங்களில், முறைகேடுகள் பற்றிய வலுவான காரணங்கள் இருந்தபோதிலும், 1990கள் வரை இலங்கையில் இருந்து தத்தெடுப்புகளைத் தடுக்க சுவிஸ் அதிகாரிகள் தவறியுள்ளனர் என்று சுவிஸ் சமஸ்டி சபை நேற்றுத் தெரிவித்துள்ளது. (ம-இ)

# கிராமத்துக்கு ஒரு வீடு

# பயனாளிகள் தெரிவில் அரசியல் தலையீடு!

யாழ்ப்பாணம், டிசெ. 16

**அடுத்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள 'கிராமத்துக்கு ஒரு வீடு'திட்டத்துக்குரிய பயனாளிகள் பெயர் பட்டியல் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் பிரதேச செயலர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போதே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் கிராமத்துக்கு ஒரு வீடு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அடுத்த ஆண்டு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்துக்குரிய பயனாளிகள் பெயர்ப் பட்டியல் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இயங்கி வரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பிரதேச செயலர்கள் அந்தப் பட்டியலுக்கு தமது பரிந்துரைகளை முன்வைக்க முடியவில்லை என்றால் தமக்கு அறிவிக்குமாறும் அங்கஜன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த காலங்களில் வீடுகள் தேவையானவர்களின் முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மாவட்டச் செயலகத்திடம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)



உலக மக்கள் அனைவரதும் நலன் வேண்டி முன்னெடுக்கப்படும் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் யாழ்ப்பாணம் குட்டியப்புலம் அபிராமி அம்பாள் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ஐ)

## மாலைதீவுக்கு சடலங்களை அனுப்புவது சாத்தியமற்றது

கொழும்பு,டிசெ.16
கொரோனாத் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் சடலங்களை, மாலைதீவுக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கை நடைமுறைச் சாத்தியமற்றது என்று எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குள்ளேயே அடக்கம் செய்ய அனுமதிப்பதன் மூலம், பொதுமக்கள் அல்லது அரசால் ஏற்படும் செலவைக் குறைக்க முடியும்.

விஞ்ஞான ரீதியில் பகுப்பாய்வு செய்வதன் மூலம், கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம்செய்ய பொருத்தமான இடத்தை அடையாளம் காண வேண்டும்.

இந்த நடைமுறை உலகம் முழுவதும் நடைமுறையில் உள்ளது. எனவே அனைத்து தரப்பினருடைய உரிமைகளும் பாதுகாக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)



## வீடு தீக்கிரை

வவுனியா, டிசெ.16
செட்டிகுளம், பயரிக்குளத்தில் வீடொன்று தீக்கிரையானது.

வீட்டில் இருந்த தந்தை, தாய் மற்றும் ஒரு வயதுக் குழந்தை ஆகியோர் அயலவர்களின் உதவியுடன் காப்பாற்றப்பட்ட போதும், வீட்டில் இருந்த உடமைகள் முழுமையாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

தீவிபத்துக்குரிய காரணம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (க-18)

## நடைபாதை வியாபாரிகளுக்கு பி.சி.ஆர். சோதனை வேண்டும்

### *வவுனியா வர்த்தகர்கள் கோரிக்கை*

வவுனியா, டிசெ.16
வவுனியாவில் பண்டிகைக் கால நடைபாதை வியாபாரிகளுக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

பொருள்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்காக தென்பகுதிக்குச் சென்று திரும்பிச்சென்றுள்ள வர்த்தகர்களுக்கு சுகாதார நடைமுறைகளுடன் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறான பலர் சமூகத்திற்குள் நடமாடித்திரிகின்றனர். எனவே இவர்களூடாக பெருகவுள்ள சமூகப் பரவலைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தென்பகுதி சென்று திரும்பியவர்கள் இவ்வாறான நடவடிக்கையில் மறைமுகமாக ஈடுபட்டு வருகின்றனர். எனவே தற்போது பண்டிகைக்காலத்தில் நகருக்கு வரும் மக்கள் கொவிட் தொற்றால் பீடிக்கப்படக்கூடிய நிலைமைகள் உருவாகி சமூகப்பரவலாக நிலைமாறும் சந்தர்ப்பங்கள் உருவாகி வருகின்றன. எனவே இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தி சமூகப் பரவலைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ப)

# சர்வதேச தங்க ஆபரண நிலையம் இரத்தினபுரியில்

கொழும்பு,டிசெ.16
இரத்தினபுரி தெமுவாவதவில் சர்வதேச இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண நிலையத்தை அமைப்பதற்குத் அரசால் திட்டமிடப்பட்டுள்ளது.
தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையின் நிதி முதலீட்டில், குறித்த நிலையத்தை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
முதலாம் கட்டமாக இரத்தினபுரி தெமுவாவதவில் அமைந்துள்ள 22 பேர்ச்சஸ் காணித்துண்டில் 5 மாடிகளைக் கொண்ட கட்டடமொன்று, 365 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிப்பதற்கும், இரண்டாம் கட்டமாக அதற்கு அருகாமையில் அமைந்துள்ள காணித்துண்டை கையகப்படுத்தி 14 மாடிகளைக் கொண்ட நவீனமயமான கட்டடமொன்றை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. (க-இ)

## பொதுப் போக்குவரத்தில் நின்று பயணிக்கத் தடை

கொழும்பு,டிசெ.16
பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துபவர்கள் நின்ற நிலையில் பயணம் செய்வது தனிமைப்படுத்தல் விதிமுறைகளின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
பயணிகள் போக்குவரத்து சேவைகள் தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், இலங்கை பொலிஸாருக்கு இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.
அதன்படி, பயணிகள் போக்குவரத்தின் போது இருக்கை வசதிக்கு ஏற்ப மட்டுமே பயணிகளைக் கொண்டு செல்ல முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க -இ)



# ஐயப்ப குருமாருக்கு சில கட்டுப்பாடுகள்!!

*மீறினால் சட்டநடவடிக்கை*

வவுனியா,டிசெ.16
அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றுக் காரணமாக ஐயப்ப குருமார்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடல் வவுனியாவில் நடைபெற்றது.
வன்னி மாவட்ட ஐயப்ப குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா குருமன்காடு ஆதிவிநாயகர் ஆலய மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.
இதன்போது ஐயப்ப விரதம் அனுஷ்டிப்பவர்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டதுடன், விரத காலத்தில் பின்பற்றப்பட வேண்டிய சில கட்டுப்பாடுகள் பற்றியும் சுகாதார பரிசோதகர்களால் எடுத்துரைக்கப்பட்டன.
குறித்த கட்டுப்பாடுகளை மீறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-110)

## சட்டத்தரணிக்கு கொரோனா



கொழும்பு,டிசெ.16
கேகாலை நீதவான் நீதிமன்றில் கடமையாற்றும் சட்டத்தரணி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
அதனால் நீதிமன்றத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.
நீதிமன்றக் கட்டடத் தொகுதியைக் கிருமித் தொற்று நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இதேவேளை சட்டத்தரணியுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களைத் தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (க-இ)

# மாகாண சபைத்தேர்தல் அடுத்த வருடம் உறுதி

*வாசுதேவ நம்பிக்கை*

கொழும்பு,டிசெ.16
**அரசியல் காரணிகளுக்கு அப்பாற்பட்டு, இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில், மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது. எனவே மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருடம் நிச்சயம் நடத்தப்படும் என்று நீர்வழங்கல் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ஆளும் தரப்பின் உறுப்பினர்களில் ஒரு தரப்பினர் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் எனவும், பிறிதொரு தரப்பினர் மாகாண சபை முறைமையை முழுமையாக இரத்து செய்ய வேண்டும் எனவும் கூறுகின்றனர்.
எனினும் மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடம் முதல் காலாண்டில் பழைய முறைமையில் நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அரசியல் காரணிகளைக் கொண்டு மாகாண சபை முறைமையை இரத்து செய்ய முடியாது.
மாகாண சபைத் தேர்தல் மக்களின் ஜனநாயக உரிமை. மக்களின் அடிப்படை உரிமைகளை அரசு பாதுகாக்கும்- என்றார். (க-இ)

## இரண்டு சந்தைகளில் பி.சி.ஆர்.பரிசோதனை



சாவகச்சேரி,டிசெ.16
மருதனார்மடம் சந்தையில் கொரோனாத் தொற்றாளர்கள் காணப்பட்டதையடுத்து, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் கொடிகாமம் மற்றும், சாவகச்சேரி சந்தைகளில் நேற்று எழுமாற்றான பி.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொண்டனர்.
இது தொடர்பாக சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினருடன் இணைந்து கொடிகாமம் மற்றும் சாவகச்சேரி பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துள்ளனர். அடுத்து வரும் நாள்களில் பிரதேசத்தில் உள்ள ஏனைய சந்தைகளிலும் இவ்வாறு பரிசோதனைகள் நடாத்தப்படவுள்ளன. (க-9)

## கணினி மயப்படுத்தப்பட்ட சமுர்த்தி வங்கி திறப்பு

மன்னார், டிசெ.16
மன்னாரில் முதலாவது கணினிமயப்படுத்தப்பட்ட சமுர்த்தி வங்கி அடம்பனில் திறந்து வைக்கப்பட்டது.
மன்னார் மாவட்டத்தில் முதலாவது கணினி மயப்படுத்தப்பட்ட (இணைய மூலம்) சமுர்த்தி வங்கியை அடம்பனில் நேற்றுக் காலை 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் திறந்து வைத்தார்.
இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர், மன்னார் மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர், உதவிப் பிரதேச செயலாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்திப் பயனாளர் என்போர் கலந்துகொண்டனர். (ப - 213)

# சமுர்த்தி வங்கிகள் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும்

*மன். மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

மன்னார், டிசெ.16
சமுர்த்தி வங்கியானது 'நிலைபேறான அபிவிருத்திக்கு நுண்நிதி பணம்' என்ற தூரநோக்குடன் உங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயலில் உங்களை அழைத்துச் செல்லுகின்றது என்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
சமுர்த்தி என்பது வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கான ஒரு செயற்திட்டமாகும். இந்தச் செயற்றிட்டத்தில் எமது மன்னார் மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழுள்ள 24 ஆயிரம் பயனாளிகள் இருக்கின்றார்கள். இம் மாவட்டத்தில் மாதாந்தம் சுமார் நாற்பது மில்லியன் ரூபா வழங்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. எமது மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அதிக நிதி கொண்ட ஒரு திணைக்களமாக இது திகழ்கின்றது. கடந்த காலத்தில் இவ் சமுர்த்தி பயனாளிகள் நிதியைப் பெறுவதற்கு பல நாள்கள் அலைந்திருப்பீர்கள் அல்லது அதிக நேரத்தைச் செலவழித்திருப்பீர்கள். ஆனால் இனி இவ்வாறான நிலை உங்களுக்கு இருக்காது.



இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள சமுர்த்தி கொடுக்கல் வாங்கலை கணினிப்படுத்தலின் மூலம் எதிர்காலத்தில் ஐந்து நிமிடங்களுக்குள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும். சமுர்த்தியின் தூரநோக்கு இங்கு பொறிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது 'நிலைபேறான அபிவிருத்திக்கு நுண்நிதி பணம்' இதுவே இவர்களின் உச்சக்கட்ட இலக்காகும். கடந்த காலத்தில் நாம் எமது மாவட்டத்தை நோக்கும்போது இந்த நுண்கடன் திட்டமானது எமது மாவட்டதை ஆட்டிப்படைத்தது எமக்குத் தெரியும். பல்வேறு நிறுவனங்கள் மக்களின் வறுமையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அதுவும் பெண்களை ஏமாற்றி இந்த நுண்கடனை வழங்கி அவர்களை தற்கொலைக்கும் அவர்களை இழிவு நிலைக்கும் தள்ளியதை நாம் நன்கு அறிவோம். இவற்றையெல்லாம் தீர்க்கவும் நீங்கள் கௌரவமாக இவ் நுண்நிதியைப் பெற்று உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் இந்த சமுர்த்தியின் செயல்பாடு துணையாக இருக்கின்றது - என்றார். (ப-60)

## முகக்கவசத்தை புறக்கணித்த 14 பேர் கைது

கொடிகாமம் பொதுச் சந்தையில் முகக்கவசம் அணியாமலும், முகக்கவசத்தை நாடியில் அணிந்து ஈடுபட்ட வியாபாரிகளும், பொருள்கள் கொள்வனவு செய்ய வந்த நுகர்வோருமாக 14 பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி வழங்கிய முறைப்பாட்டை அடுத்து, கொடிகாமம் பொலிஸார் குறித்த 14 பேரையும் கைதுசெய்து வழக்குப் பதிவு செய்தனர். இவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் இன்று வழக்குத் தாக்கல்செய்யப்படவுள்ளது. (க-9)

# புரேவி புயல் மழையின் கொடூரம்; இழப்பீடுகளை உடன் வழங்குக

## தேவன்பிட்டி மீனவர்கள் கோரிக்கை

**மன்னார், டிசெ. 16**

**புரேவிப் புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான இழப்பீடுகளை விரைவாக வழங்குமாறு மன்னார் தேவன்பிட்டி மீனவர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

எமது கிராமத்தில் 315 மீனவக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

தற்போது வீசிச் சென்ற கடும் புயல் மழையால் எமது மீன்பிடிப் படகுகள், இயந்திரங்கள், வாடிகள் கடலில் அடித்துச் செல்லப்பட்டு தொழில் ரீதியாகவும் பெரும் பாதிப்படைந்துள்ளோம். எனவே எமது மீனவ சமூகம் மீண்டெழுவதற்கு தற்போதைய புயல் மழைத் தாக்கத்தால் உண்டான பாதிப்புக்களுக்கு விரைவாக இழப்பீடுகளைத் தந்து உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கின்றோம் - என்றனர். (ப-213)

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் கடமையேற்பு

கொழும்பு,டிசெ.16

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளாரென் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் பேராசிரியர் சரத் வீரசேகர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண, இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-இ)

## வீட்டுக்கு வீதி இல்லை;
# மின்கம்பத்தில் ஏறி ஒருவர் கவனவீர்ப்பு

கொழும்பு, டிசெ. 16

தனது வீட்டுக்குச் செல்வதற்குப் பாதையொன்று இன்மை காரணமாக மாத்தறை நகர சபைக்கு முன்னால் அமைந்துள்ள மின் கம்பத்தில் ஏறி நபரொருவர் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டார்.

மாத்தறை, பொல்ஹேனை பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபரே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டார். மாத்தறை தீயணைப்புப் படையினரின் உதவியுடன் மேற்படி நபர் கீழே இறக்கப்பட்டதையடுத்து மாத்தறை பொலிஸாரால் அவர் கைதுசெய்யப்பட்டார். (ம-இ)



## பிரதேச செயலகத்தினர் மௌனப் போராட்டம்

முல்லைத்தீவு,டிசெ.16

மாந்தை கிழக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நேற்று மௌனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலரின் உத்தியோக தங்குமிட விடுதி மீது இனந்தெரியாத நபர்கள் சிலர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"அரச அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்து, பறிக்காதே பறிக்காதே அரச ஊழியர்களின் பாதுகாப்பைப் பறிக்காதே, நினைக்காதே நினைக்காதே கல்லெறிந்து காரியம் சாதிக்க நினைக்காதே" போன்ற எதிர்ப்பு வாசக அட்டைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர். (க)

## தடுப்பூசியைப் பெற 3 குழுக்கள் நியமனம்

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.16

கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக் கொடுப்பதற்காக 3 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

விசேட தொடர்பாடல் குழுவினூடாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின்னர் இதற்கான குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர், விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தக் குழுக்களுக்கு மேலதிகமாக 3 உப குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன. இந்த உப குழுவூடாக நாட்டு மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்கு ஒரு பில்லியன் கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன என உலக சுகாதார ஸ்தாபனம் சமீபத்தில் அறிவித்தது.

இதற்கிணங்க, அடுத்த வருடத்தின் நடுப்பகுதியில் நாட்டின் சனத்தொகையில் 10 வீதமான மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசியை வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் இணங்கியுள்ளது - என்றார். (ப)

# எதிர்பார்ப்புகள் எவற்றையும் கோத்தா நிறைவேற்றவில்லை

## சோபித தேரர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 16

நல்லாட்சி அரசாங்கத்தில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக நாட்டின் சிறந்த எதிர்காலத்துக்காக புதியதொரு அரசாங்கத்தை தோற்றுவித்தபோதிலும், தமது எதிர்பார்ப்புக்களை நிறை வேற்றுவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசாங்கத்தில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாகவே நாட்டில் சிறந்த எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு புதிய அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டது. எனினும் இதன் மூலம் எமது எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படும் என்று தோன்றவில்லை.

நாளாந்தம் வெளியாகும் கவலைக்குரிய செயற்பாடுகள், குறிப்பாக சுற்றுச்சூழல் அழிவு, தேசிய சொத்துக்கள் அழிக்கப்படல், நெதர்லாந்தைச் சேர்ந்த தேரரின் திடீர் மரணம் போன்றவை அதிருப்தியளிக்கின்றன. இவற்றுக்கு கீழ் காணப்படும் சதித்திட்டம் என்ன என்பது குறித்து எமக்குத் தெரியாது. கடந்த அரசாங்கத்திலும் தற்போதைய அரசாங்கத்திலும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில் எவ்வித மாற்றமும் இல்லை. 'நீங்கள் என்னைக் காப்பாற்றுங்கள், நாம் உங்களைக் காப்பாற்றுகின்றோம்.' என்பதே அரசியல் என தெளிவுபடுத்தியிருக்கிறார்கள் - என்றார். (ம-இ)

## ஒரு கிராமத்துக்கு 210 வீட்டுத் தோட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு 210 வீட்டுத் தோட்டம் என்ற 5 வருட வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மாவட்டச்செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது. விவசாயப் பிரிவு, சமுர்த்திப் பிரிவு ஆகியன ஒன்றிணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

தொடர்ச்சியாக 5 வருடம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தின் கீழ், முதற் கட்டமாக 8 வகையான மரக்கறி வகைகளுக்கான விதைகள் மற்றும் நாற்றுகள் கிராம மட்டத்தில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. ஜனவரி மாதம் இரண்டு தென்னம் கன்றுகள், ஒரு பழ மரக்கன்று, கோழிக்குஞ்சுகள் ஆகியன வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## ஆர்ப்பாட்டத்தின் எதிரொலி?
# புதிய வீடுகளுக்கு மின்இணைப்பை வழங்குவதில் அதிகாரிகள் இழுபறி

வவுனியா, டிசெ.16

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் வீடுகளுக்கு புதிதாக மின் இணைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்த பலர் மின் இணைப்புக்களைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு இழுபறி நிலைமைகளை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வவுனியா மன்னார் வீதியிலுள்ள மின்கம்பங்களை அகற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராக அப் பகுதியில் கடந்த வாரம் ஒன்றிணைந்த மக்கள் வீதியை வழிமறித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இதனையடுத்து அதிகாரிகள், பொலிஸார், நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலையீட்டால் மின் கம்பங்களை அகற்றுவது தற்காலிகமாகப் பிற்போடப்பட்டிருந்தது. இவ்வாறான பின்னணியிலேயே அந்தப் பகுதி மக்களுக்கு மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

## கொழும்பு மருத்துவமனைக்கு வாஸ் குணவர்த்தன மாற்றம்!

கொழும்பு, டிசெ. 16

கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில், வெலிக்கட சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன கொழும்பு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

வெலிக்கட சிறையின் எச் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள வாஸ் குணவர்தனவுடன், 101 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் 10 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் வாஸ் குணவர்தனவும் உள்ளடங்குகின்றார். (ம-இ)

# கே.கே.எஸ் சீமெந்து தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, டிசெ.16

மூடப்பட்டிருக்கும் உள்நாட்டு தொழிற்சாலைகளை மீண்டும் திறக்கும் திட்டத்தின் கீழ் காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீமெந்துக் கூட்டுத்தாபனத்தைப் பார்வையிடச் சென்ற கைத்தொழில் அமைச்சின் அதிகாரிகள் இது தொடர்பாகத் தேவையான ஏற்பாடுகளை ஆராய்ந்தனர். தேசிய வருமானத்துக்குப் பங்களிக்கக் கூடிய, தற்போது மூடப்பட்டுள்ள உள்நாட்டுத் தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான செழிப்புப் பார்வை கொள்கைக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைத்தொழில் அமைச்சின் ஆலோசகர் சுனில் ஹெட்டியாராச்சி, இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் காமினி ஏக்கநாயக்க உள்ளிட்ட குழுவினர் காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன வளாகத்துக்குச் சென்று பார்வையிட்டனர். சீமெந்துக் கூட்டுத்தாப னம் செயற்பட்ட காலத்தில் பணிபுரிந்த பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் இதில் கலந்துகொண்டனர். (ப)

## காணாமல் போன இளைஞர் படகு விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு. டிசெ.16

இலங்கையர்கள் உள்ளிட்ட சிலர் மொரோக்கோவிலில் இருந்து ஸ்பெயினுக்கு பயணித்த படகு விபத்துக்குள்ளானது என்று தகவல் வெளியாகியுள்ளது. இந்தச் சம்பவத்தில் வவுனியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காணாமற்போயுள்ளார் என்று அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.
சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் மொரோக்கோவுக்கு அந்த இளைஞர்கள் சென்றிருந்தனர் என்று உறவினர்கள் தெரிவித்தனர். கடந்த 3ஆம் திகதிக்குப் பின்னர் அவர்களுடனான தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது. தாம் ஸ்பெயினுக்குச் செல்லவுள்ளோம் என இறுதியாக அவர்கள் குடும்பத்தாருக்கு தகவல் வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், அவர்கள் பயணித்த படகு விபத்துக்குள்ளானது என அதிலிருந்து தப்பிய ஒருவர் வவுனியாவைச் சேர்ந்த இளைஞர்களின் உறவினர்களுக்கு அறிவித்துள்ளார். வவுனியா - குருமன்காடு பகுதியைச் சேர்ந்த பிரசன்னா சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று பெற்றோர் தெரிவித்துள்ளனர். இதேவேளை வவுனியா - நொச்சிகுளம் பகுதியைச் சேர்ந்தவர் காணாமல் போயுள்ளார். (ப)

## சந்தேக நபருக்கு பிணை

கொடிகாமம், டிசெ.16

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கஞ்சாவுடன் கைதான நபருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.
கொடிகாமம் பஸ் தரிப்பு நிலையத்தில் 5 கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.
சந்தேகநபரை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஜ-59)



## விசுவமடு பகுதியில் மரக்கடத்தல் முறியடிப்பு

கிளிநொச்சி,டிசெ.16

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் பாலைமரக்குற்றிகளை கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.
தருமபுரம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் டிப்பர் வாகனத்துடன் 19 மரக்குற்றிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.
சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-113)

## சீனத் தடுப்பூசியின் தன்மைகுறித்து ஆய்வறிக்கை கோரியது இலங்கை

யாழ்ப்பாணம், டிசெ. 16

சீனா தயாரிக்கும் கொரோனாத் தடுப்பூசியின் வெற்றி குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோயியல் மற்றும் கொவிட் தடுப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சகம் சீனாவில் உள்ள இலங்கை தூதரகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.
சீனாவின் இலங்கை தூதர் கலாநிதி பாலித கோஹனவுக்கு எழுதிய கடிதத்தில் இந்த அறிக்கை கோரப்பட்டுள்ளது என வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளர் கலாநிதி அமல் ஹர்ஷா டி சில்வா தெரிவித்துள்ளார்.
சீனாவில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசி வெற்றிகரமாக இருந்தால், உலக சுகாதார அமைப்பின் ஒப்புதலுடன் இராஜதந்திர தலையீட்டின் மூலம் தடுப்பூசியைப் பெற முடியும் என்று அவர் நம்பிக்கை தெரி வித்தார். (ம-இ)

## சிறுகதை, கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 16

நவாலியூர் தேவிபரமலிங்கம் எழுதிய சிறுகதை மற்றும் கவிதை தொகுதி புத்தக வெளியீடு இந்த மாதம் நடைபெறவுள்ளது.
'உள்ளே இருப்பது நெருப்பு' என்ற சிறுகதைத் தொகுதியும், 'இழப்பதற்கு எதுவும் இல்லை' என்ற கவிதைத் தொகுதியுமே இந்த மாதம் வெளியிடப்படவுள்ளன. (ஓ.5)

## விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.16

ஊர்காவற்றுறை பிரதேச மகளிர் அபிவிருத்தி நிலையத்தின், மனைப்பொருளியல் டிப்ளோமா கற்கைநெறியுடன் இணைந்த ஆடை வடிவமைத்தலுக்கான தொழில் முறைமைக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
கற்கை நெறி எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.
ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில், க.பொ.த. (சா/த) வரை கல்வி கற்ற, 18 தொடக்கம் 35 வயதுக்குட்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கலாம். எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் ஊர்காவற்றுறை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்று, பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க முடியும் என்று ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் அறிவித்துள்ளார். (க-இ)

## மக்களுக்கு நெருக்கமான சேவை: பொலிஸ் அதிகாரிகள் கலந்தாய்வு

கொழும்பு. டிசெ.16

மக்களுக்கு மிகவும் நெருக்கமான பொலிஸ் சேவையை எதிர்வரும் காலங்களில் முன்னெடுப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கும், பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
இந்தக் கலந்துரையாடலின்போது மக்களுக்கு விருப்பமான முறையில் பொலிஸாரின் செயற்பாடுகளை முன்னேற்றமடையச் செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. அதற்கமைய குற்றச் செயல்களைத் தடுத்தல், பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயற்பாடுகளை தடுத்தல் தொடர்பிலும்,பொலிஸாருக்குத் தேவையான நலன்புரிச் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல், வீதிப் பாதுகாப்பு மற்றும் வாகன விபத்துக்களைத் தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது - என்றார். (ப)



## "தாலம்" ஓலை நூல்3 வெளியீடு

வவுனியா,டிசெ.16

வவுனியா மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் "தாலம்" ஓலை-3 வெளியீட்டு விழா வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.
கூட்டுறவுச் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ம.கலிஸ்ரஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்டச் செயலர் சமன்பந்துல சேனவும், சிறப்பு அதிதியாக கூட்டுறவு உதவி ஆணையாளர் இந்திராசுபசிங்கவும் கலந்து கொண்டார்.
நூலின் முதற்பிரதியை வவுனியாமாவட்டபனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் பிரேமதாஸ் வெளியிட்டு வைக்க மாவட்டச் செயலர் பெற்றுக்கொண்டார். நூலுக்கான விமர்சன உரையை ஓய்வு நிலை சிரேஸ்ட விரிவுரையாளர் நா.பார்த்திபன் நிகழ்த்தினார். (ப-110)

# சனிப்பெயர்ச்சி பலன்கள்!



ராசி மண்டலத்தில் வலம் வரும்போது, சந்திரன் இருக்கும் ராசியிலிருந்து பன்னிரண்டிலும், சந்திரன் இருக்கும் ராசியிலும், அடுத்து சந்திரனில் இருந்து 2ஆவது ராசியிலும் இரண்டரை வருடங்கள் தங்கியிருந்து, பயணிப்பார் சனி.

ஏழரைச் சனி என்றதும் பயம்கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜென்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர். நம்மை வளர்த்து, நமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, இன்ப,துன்பங்களை வினைப்படி செயல்படுத்தி, வாழவைப்பவர்.

நிகழும் சார்வரி வருடம் மார்கழி 11ஆம் நாள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை இரவு 4:49 மணிக்கு (விடிந்தால் 27.12.2020) உத்திராடம் நட்சத்திரம் 2ம் பாதம் மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார் (வாக்கியப் பஞ்சாங்கப்படி). இந்தப் பெயர்ச்சியில் பன்னிரு ராசிகளுக்கும் அவர் அருளப்போகும் பலாபலன்கள் இங்கே தரப்படுகின்றன.




நம்பிக்கையைக் காப்பவர் நீங்கள். சனி பகவான் 27.12.2020 முதல் 19.12.2023 வரை, லாப வீட்டில் அமர்வதால் இனி எதிலும் உங்கள் கை ஓங்கும். எடுத்த வேலையைத் திறம்பட முடிப்பீர்கள்.

சோர்ந்திருந்த நீங்கள் இனி சுறுசுறுப்பாவீர்கள். மனத் தெளிவு அடைவீர்கள். குடும்பத்தில் நிம்மதி பிறக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். பண வரவுக்கு இனி குறைவிருக்காது. சேமிக்கும் எண்ணமும் ஏற்படும். பெரிய அந்தஸ்தில் இருப்ப வர்களின் நட்பு கிடைக்கும். பூர்வீகச் சொத்தை மாற்றி உங்கள் ரசனைக்கேற்ப புது வீடு வாங்குவீர் கள். பிள்ளை இல்லாமல் தவித்த தம்பதியருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். மகளுக்கு ஊரே மெச்சும்படி திருமணம் முடிப்பீர்கள். மகனுக்கு அயல்நாட்டில் உயர்கல்வி அமையும்.

பழைய கடன் பிரச்னைகளைத் தீர்க்க புது வழி பிறக்கும். சகோதரிக்கு நல்லவிதத்தில் திருமணம் முடியும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். நண்பர்கள், உறவினர்கள் உதவியுடன் புதுத் தொழில் தொடங்குவீர்கள். 29.03.2023 முதல் 24.08.2023 வரை சனி பகவான் அதிசாரத்தில் 12ம் வீடான கும்ப ராசியில் சென்று அமர்வதால் வீண் செலவுகள், கடன் பிரச்சினை, திடீர் பயணங்கள், கவலைகள் வந்து செல்லும்.

சனி பகவான் உங்கள் ராசியைப் பார்ப்பதால் டென்ஷன், கோபம், அலர்ஜி வந்து நீங்கும். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். செரிமானக் கோளாறு, நரம்பு பிரச்சனைகள் வந்து நீங்கும். சனி பகவான் உங்களின் 5ம் வீட்டைப் பார்ப்பதால், பிள்ளைகளின் போக்கில் கவனம் செலுத்துங்கள். படிப்பு, உத்தியோகத்தின் பொருட்டு பிள்ளைகளைப் பிரிய வேண்டி வரும். சனி பகவான் உங்களின் 8ம் வீட்டை பார்ப்பதால் அயல்நாட்டுப் பயணம் சாதகமாகும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**சனி பகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

உங்களின் சஷ்டமாதிபதியான சூரியனின் உத்திராடம் நட்சத்திரத்தில் 27.12.2020 முதல் 27.12.2021 வரை சனி பகவான் செல்வதால், காரியத்தடை, வீண் பகை, அலைச்சல், பணப் பற்றாக்குறை, நெஞ்சுவலி வந்து போகும். 11.05.2021 முதல் 26.09.2021 வரை சனி பகவான் வக்ரத்தில் செல்வதால், அக்கால கட்டத்தில் சொத்து வழக்கில் வெற்றி கிட்டும். வெளிநாட்டுப் பயணங்கள் தேடி வரும். உங்களின் பூர்வ புண்யாதிபதி யான சந்திரனின் திருவோணம் நட்சத்திரத்தில் 28.12.2021 முதல் 26.01.2023 வரை சனி பகவான் செல்வதால் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும்.

சிலருக்கு குழந்தைப் பாக்கியம் கிட்டும். பணவரவு உண்டு. சொத்து வாங்குவீர்கள். இதற்கிடையில் 25.05.2022 முதல் 09.10.2022 வரை சனி பகவான் வக்கிரத்தில் செல்வதால் வீண் அலைச்சல், தர்ம சங்கடம், சிறுசிறு நஷ்டங்கள் வந்து செல்லும்.

உங்களின் தனபாக்கியாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 27.01.2023 முதல் 19.12.2023 வரை சனிபகவான் செல்வதால் குடும்பத்தில் சந்தோஷம், பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். இதற்கிடையில் 27.06.2023 முதல் 23.10.2023 வரை சனி பகவான் வக்ரமடைவதால் சிறுசிறு விபத்து, முன்கோபம், வீண் டென்ஷன், மனஉளைச்சல், ஒற்றைத் தலைவலி, உடல் உஷ்ணத்தால் அடிவயிற்றில் வலி வந்து செல்லும்.

இல்லத்தரசிகளுக்கு ஆடை அணிகலன் சேரும். கணவர் உங்களின் புதிய முயற்சிகளுக்கு ஆதரவளிப்பார். நாத்தனாருக்கு நல்ல இடத்தில் திருமணம் முடியும். அலுவலகம் செல்லும் பெண்களே, தேங்கிக் கிடந்த பணிகளை உற்சாகத்துடன் செய்து முடிப்பீர்கள். சம்பளம் உயரும்.

வியாபாரிகளே, தேங்கிக் கிடந்த சரக்குகளைச் சாமார்த்தியமாக விற்றுத் தீர்ப்பீர்கள். வாடிக்கை யாளர்களின் தேவையறிந்து செயல்படுவதால் லாபம் அதிகரிக்கும். கடையை வேறு இடத்துக்கு மாற்றுவீர்கள். வெளிநாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களுடன் புது ஒப்பந்தங்கள் செய்வதன் மூலம் உங்கள் நிறுவனத்தின் புகழ் கூடும். ரியல் எஸ்டேட், பதிப்பகம், சிமெண்ட் வகைகளால் லாபம் அடைவீர்கள்.

உத்தியோகஸ்தர்களே, உங்களின் நிர்வாகத் திறமை கூடும். புது பொறுப்புகள் தேடி வரும். மூத்த அதிகாரிகள் உங்களின் ஆலோசனைக்கு முக்கியத்துவம் அளிப்பார்கள். சம்பளம் உயரும். கணினித் துறையினரே! பணி செய்யும் நிறுவனத்திலிருந்து விலகி, சம்பளம், சலுகைகள் அதிகமுள்ள வேலைக்கு மாறுவீர்கள்.

## தனிமையிலிருந்த வயோதிபர் சாவு

ஹற்றன், டிசெ.16

பொகவந்தலாவையில் சுயதனிமைப்படுத்தலில் இருந்த 84 வயதுடைய வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அவரது பேரன் கொழும்பிலிருந்து வந்து தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். அவரின் பி.சி.ஆர். மாதிரி நுவரெலியா மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் கிடைத்த பின், சடலம் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என பொகவந்தலா பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். (வ-இ)

## ஆயுர்வேத சமையல் குறிப்பை பரிசோதனை செய்யாதீர்!!

### *தேசிய உள்நாட்டு மருத்துவ அமைச்சகம் தெரிவிப்பு*


கொழும்பு, டிசெ.16

கொரோனாத் தொற்றைத் தடுக்க அல்லது வைரஸைக் குணப்படுத்துவதாகக் கூறி சமூக ஊடகங்களில் பரப்பப்படும் மூலிகை மருந்துகளின் சமையல் குறிப்புகளை பரிசோதனை செய்ய வேண்டாம் என்று தேசிய உள்நாட்டு மருத்துவ அமைச்சகம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொரோனாவைக் குணப்படுத்த உதவும் என்று கூறி உள்ளூர் பொருள்களுடன் கூடிய சமையல் குறிப்புகள் பெருமளவில் சமூக ஊடகங்களில் பரப்பப்படுகின்றன என்று தேசிய உள்நாட்டு மருத்துவ ஊக்குவிப்பு, கிராம மற்றும் ஆயுர்வேத மருத்துவமனைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

"இந்த வைத்தியங்களை முயற்சிக்க வேண்டாம் என்று நாங்கள் மக்களைக் கேட்டுக்கொள்கிறோம்" என்று அமைச்சின் செயலாளர் குமாரி வீரசேகர கூறினார். (ற-இ)

## புதிய பறவை இனம் நாட்டில் கண்டுபிடிப்பு



கொழும்பு, டிசெ.16

இலங்கையில் புதியவகை பறவை இனமொன்றை கொழும்பு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட புதிய பறவைக்கு சிங்கள மொழியில் அனுமன் ஒலிவியா என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

புதிய பறவைகள் தொடர்பான ஆராய்ச்சியாளர் ஜூட் ஜானித் நிரோஷன் புதிய கண்டுபிடிப்பை மேற்கொள்ள சிரேஷ்ட பறவை ஆராய்ச்சியாளர் டாக்டர் சம்பத் செனவிரத்னவுடன் இணைந்துள்ளார். (ந-இ)



## இன்றைய நாள்

**மேடம்:** சகோதர, சகோதரிகளுக்குள் ஒற்றுமையும் நன்மையும் ஏற்படும். நெருங்கிய நண்பர்களிடமிருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும். எதிர் பாலின நட்புகளால் நன்மைகள் மேலும் அதிகரிக்கும்.

**இடபம்:** தேவையற்ற பிரச்சினை ஏற்படாமல் கவனமாக இருங்கள். வாக்குவாதம் காரணமாகத் தொல்லை ஏற்பட வாய்ப்பு உண்டு. வேலை இல்லாதவர்களுக்கு வேலை கூடிவரும்.

**மிதுனம்:** நெருங்கிய உறவினருடன் வாக்குவாதம் செய்ய வேண்டாம். மனநிறைவு தரும் செயல்களை செய்து திருப்தி அடைவீர்கள். பெரியோரின் ஆசிகளைப் பெறுவீர்கள்.

**கடகம்:** சிலருக்கு வாழ்க்கைத் துணைவரால் மிகுந்த நலம் உண்டாகும். வியாபாரிகள் வாக்குவாதங்களை தவிர்த்தால் நன்மை ஏற்படும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடிவரும். மனம் குளிரும்.

**சிம்மம்:** சக ஊழியர்களால் ஏற்பட்ட கவலைகள் நீங்கும். நலம் விளையும். சிந்தித்து செயல்பட்டு வெற்றி பெறு வீர்கள். உழைப்பிற் கேற்ற பலன் கிடைப்பதில் காலதாமதம் உண்டாகும்.

**கன்னி:** தெய்வ வழிபாட்டில் ஈடுபாடு கூடும். மன நிறைவு வரும். அலுவலகத்தில் இருந்து வந்த நிம்மதியற்ற சூழ்நிலை மாறும். தந்தையாலும், அரசாங்கத்தாலும் கூடுதல் நலம் காண்பீர்கள்.

**துலாம்:** எதிர்காலம் சம்பந்தமான எண்ணம் ஒன்று நிறைவேறும். பிள்ளைகள் மேடை ஏறி கைதட்டல் வாங்குவதால் மகிழ்வீர்கள். பணியிடத்தில் உங்களுக்குப் பெருமை தரும்

**விருச்சிகம்:** குடும்பத்தில் யாருக்கேனும் சுபநிகழ்ச்சி நடைபெறும் சூழல் ஏற்படும். பேச்சினால் ஏற்பட்ட பிரச் சினைகளை பேச்சினாலேயே தீர்ப்பீர்கள். விலகிச் சென்ற வரன்கள் மீளும்.

**தனுசு:** நண்பர்கள் மூலம் நீங்கள் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களைப் புரிந்து கொள்வீர்கள். பெரிய பொறுப்புகளை நிறைவேற்றி வெல்வீர்கள்.

**மகரம்:** மாணவர்கள் புதுமை படைப்பீர்கள். தீமை விலகக்கூடும். மனதுக்கு இனிய சம்பவங்கள் இன்று உங்களுக்கு நிகழும். உடன்பிறந்தவர்களால் நன்மை உண்டாகும்.

**கும்பம்:** எதிர்ப்புகள் விலகும். பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். சகோதர, சகோதரிகளுடன் இருந்த மனத் தாங்கல்கள் நீங்கும்.

**மீனம்:** அலுவலகத்தில் எதிரிகள் விலகுவார்கள். நண்பர்கள் உதவுவர். உங்களின் புதிய முயற்சிகளுக்கு மேலதிகாரியின் ஆதரவு இருக்கும். அரசு வழி உதவிகள் கிடைக்கும்.

# மாகாணத் தேர்தலை எதிர்கொள்ள தயார்!

## *விரைவில் நடத்துமாறு சஜித் அணி கோரிக்கை*



யாழ்ப்பாணம், டிசெ. 16

**தேசிய இனப் பிரச்சினைக்கானதொரு அரசியல் தீர்வாகவே மாகாணசபை முறைமை முன்வைக்கப்பட்டது. எனவே, அதற்கான தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்படவேண்டும். அதனை எதிர்கொள்வதற்கு பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.**

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மாகாணசபைத் தேர்தல் என்பது அரசமைப்பு ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமையாகும். எனினும் அத்தேர்தல் நீண்டகால மாக நடைபெறாமல் ஆட்சிஅதிகாரம் ஆளுநர்கள் வசம் சென்றுள்ளது. இந்த நிலைமை நீடிக்கக் கூடாது.

தேர்தல் முறைமை தொடர்பில் நாடாளுமன்றம் இன்னும் உரிய அனுமதியை வழங்காததாலேயே தேர்தலை நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே, தேர்தலை நடத்துவதற்கான சட்டத் திருத்தத்தை அரசாங்கம் உடன் நாடாளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும். பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்கு நாம் எதிர்ப்பு இல்லை.

எனவே, பழைய முறையில் தேர்தலை நடத்திவிட்டு அடுத்துவரும் காலப்பகுதியில் எந்த முறையில் நடத்தலாம் என்பது பற்றிப் பரிசீலிக்கலாம்.

அந்தவகையில் தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும். அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார்' என்றார். (ம-44)

# 'வைரமுத்துக்கள்' நூல் வெளியீடு

மன்னார்.டிசெ.16


கவிஞர் வை.கஜேந்திரன் எழுதிய 'வைரமுத்துக்கள்' சிறுவர் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் வெற்றிக்கலைச் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் தமிழமுது நண்பர்கள் வட்டத்தின் ஆலோசகர் எஸ்.விமலேஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமேல் கலந்து கொண்டு நூலினை வெளியிட்டு வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ஜ-56)





# கட்டாக்காலிகளால் வீதிகளில் தொல்லை

கிளிநொச்சி, டிசெ.16

இயக்கச்சி சந்தியில் கட்டாக்காலியாகத் திரியும் மாடுகள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்து வருகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

நாள் தோறும் ஒரு தொகை மாடுகள் இயக்கச்சிச் சந்தியில் மாலை வேளைகளில் போக்குவரத்துக்கு இடையூறாக பிரதான ஏ9 வீதியில் நடமாடி வருகின்றன. இதன் காரணமாக வீதியால் பயணிக்கும் வாகனச் சாரதிகள் பெரும் சிக்கலை எதிர்கொள்கின்றனர். மோட்டர் வண்டியில் பயணிப்போர் பலர் விபத்துகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மேலும் வீதியில் நிற்கும் மாடுகள் இரவு நேரங்களில் இயக்கச்சி சந்தையை அசிங்கப்படுத்தியும் வருகின்றன. எனவே இது தொடர்பில், அதன் உரிமையாளர்கள் உடனடியாக கவனத்தில் கொண்டு மாடுகளை கட்டி வளர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரப்பட்டுள்ளது. (ப-70)

# கொரோனாவைக் கட்டுப்படுத்த மக்களின் ஒத்துழைப்பு போதாது

சாவகச்சேரி.டிசெ.16

யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தொற்று ஏற்படாதிருக்க அனைவரும் மேற்கொண்ட முயற்சிகளுக்கு, மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் திடீரென கொரோனாத் தொற்றால் இதுவரை 90 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தைகள், பாடசாலைகள் முடக்கப்பட்டுள்ளன.

மக்கள் சுகாதாரத் திணைக்களத்தினர், பொலிஸார், மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள், படை அதிகாரிகள் விடுத்த சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியிருப்பின் கொரோனாத் தொற்று அதிகரிக்க வாய்ப்பு இருந்திருக்காது.

தனிநபர் இடைவெளியைப் பேணுங்கள், கட்டாயம் முகக்கவசத்தை முறையாக அணிந்து நடமாடுங்கள் என்று அறிவுறுத்தப்பட்டது.

மக்கள் இதனை முறையாகக் கடைப்பிடித்திருந்தால் இவ்வாறான கொத்தணி உருவாகும் நிலை ஏற்பட்டிருக்காது என்றும் அவர் தெரிவித்தார். (க-9)

# மன்னார் கடலிலும் இந்திய மீனவர்கள்; தடுக்க ஜனாதிபதி முன்வரவேண்டும்

## மன். கடற்றொழிலாளர் சமாசம் கோரிக்கை

**மன்னார்,டிசெ.16**

**மன்னார் கடல் பகுதிக்குள் நுழையும் இந்திய மீனவர்களின் வருகையை நிறுத்த ஜனாதிபதி துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாச செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.**

மீனவர்களது பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதிக்கு கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்டச் செயலர் நந்தினி ஸ்ரான்லி டி மேலிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்திய மீனவர்களின் வருகையால் வட பகுதி மீனவர்கள் குறிப்பாக மன்னார் மாவட்ட மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களின் வருகையால் எமது மீனவர்களின் வலைகள்,படகுகள் தொடர்ந்தும் சேதத்துக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. எனவே குறித்த விடயம் தொடர்பில் உடனடியாக ஜனாதிபதி தலையிட்டு, இந்திய இலுவைப் படகுகளின் வருகையை நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.என்றார். (ஐ-56)



# மரண வீட்டுக்குச் சென்ற 10 பேருக்குத் தொற்று

காலி, டிசெ.16

காலி மாவட்டத்தின் இந்துரவதுன்துவ பிரதேசத்தில் மரணச் சடங்கொன்றில் கலந்துகொண்ட 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என காலி மாவட்ட தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இப்பகுதியில் 45 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை மூலம் 10 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மரணச் சடங்கில் பேருவளை மற்றும் அளுத்கமவைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது. (வ-இ)



# சுற்றுலாத்துறைக்கு தொடர்ந்து நிவாரணம்

கொழும்பு,டிசெ.16

கொவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத்துறை சார்ந்தவர்களுக்கு தொடர்ந்தும் நிவாரணம் வழங்க அரசு கவனம் செலுத்தியுள்ளது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும், இவர்களுக்காக ஏற்கனவே பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறையை முன்னெடுத்துச் செல்வதற்காக வங்கிகள் மூலம் இதுவரை 150 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தைத் திறந்தாலும் சுற்றுலாத்துறையை வழமைக்கு கொண்டுவர எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை உறுதியாகக் கூற முடியாது. சுற்றுலாத்துறை வழமை நிலைக்குத் திரும்பும் வரை இந்த் துறையில் ஈடுபட்டுள்ளவர்களை கவனித்துக் கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ந-இ)



# 25,000 கிலோ மஞ்சள் மீட்பு

கொழும்பு, டிசெ.16

சுங்க விசாரணைகளின் நிமித்தம் கைப்பற்றப்பட்ட கொள்கலனொன்றில் 19 மில்லியன் ரூபா பெறுமதியான 25,000 கிலோ கிராம் மஞ்சள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்கலன் புறக்கோட்டையிலுள்ள வர்த்தகர் ஒருவரால் டுபாயிலிருந்து நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என சுங்க ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட கொள்கலனில் ஒரு இலட்சம் கிலோ கிராமுக்கும் அதிக தொகை பெரிய வெங்காயம் காணப்படுகிறது என சுங்கத்திடம் தெரிவித்து அனுமதிபெற முயற்சிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (வ-இ)

# நடுத்தர வர்க்கத்தினருக்கான வீட்டுத்திட்டத்தை ஆரம்பிக்குக

## பிரதமர் மஹிந்த பணிப்பு

கொழும்பு, டிசெ.16

குறைந்தளவிலான வசதி கொண்ட குடியிருப்புகளில் வசிக்கும் மக்கள் மற்றும் நடுத்தரவர்க்கத்தினருக்கான 7 ஆயிரத்து 500 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச நகர அபிவிருத்தி அதி காரசபைக்கு அறிவுறுத்தியுள்ளார். நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டங்கள் தொடர்பில் அதிகாரசபையின் அதிகாரிகளுடன் அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பொன்றின் போதே பிரதமர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அதற்கமைய இம்மாத இறுதிக்குள் இந்த வீட்டுத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை ஒப்புதல் தெரிவித்துள்ளது. (வ-இ)

# தேவையற்ற திட்டங்களுக்காக கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கீடு

## *எம்.பி ஹர்ஷன ராஜகருணா பாய்ச்சல்*

கொழும்பு, டிசெ.16



வரவு-செலவுத் திட்டத்தில் அநாவசிய அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசாங்கம் கோடிக்கணக்கான நிதியை ஒதுக்கியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாளொன்றுக்கு 500 முதல் 600 தொற்றாளர்கள் இனங்காணப்படும் நிலைமையானது நாட்டில் வைரஸ் தொற்று கட்டுப்படுத்தப்படவில்லை என்பதை தெளிவுபடுத்துகிறது.

இதன்மூலம் நாடு எந்தளவுக்கு அபாய நிலையை அடைந்துள்ளது என்பது சுகாதாரத் துறையினராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில்கூட கொரோனா தடுப்புக்கான தடுப்பூசியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காமல் அமைச்சர்கள் ஆயுள்வேத பானங்களை அருந்திக் கொண்டிருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# சுற்றுலாப் பயணிகள் 500 பேருக்கே அனுமதி

கொழும்பு, டிசெ.16

இலங்கைக்கு நாளாந்தம் 500 சுற்றுலாப் பயணிகள் மாத்திரமே வருகை தர முடியும் என்று சுற்றுலா மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. விமான நிலையங்களை மீளத் திறக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கு வருகைதரும் அனைத்து சுற்றுலாப் பயணிகளையும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தி, ஒரு வார கால தனிமைப்படுத்தலுக்காக ஹொட்டல்களுக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 58 ஹொட்டல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகள், பதிவு செய்யப்பட்ட ஹொட்டல்கள் தவிர்ந்த ஏனைய ஹொட்டல்களை கோருவார்களாயின் அதற்கு சுகாதார அதிகாரிகளின் பரிந்துரை அவசியமாகும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (வ-இ)

# ஸ்பிரிட் மது அருந்தி இருவர் உயிரிழப்பு

குருநாகல், டிசெ.16

மீரிகம கீனதெனிய பகுதியில் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட ஸ்பிரிட் அடங்கிய ஒரு வகை மதுபானத்தை அருந்திய இருவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் ஒருவர், சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். உயிரிழந்த இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 54 மற்றும் 47 வயதான சகோதரர்கள் என்பதும் தாயின் இறுதிச்சடங்கின் பின்னர் மதுசாரம் அருந்தியுள்ளனர் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (வ-இ)

# சடலங்களைப் புதைக்க மறுப்பது இனப்பாகுபாட்டின் வெளிப்பாடே

## எம்.பி.ராஜித தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.16

இலங்கையைத் தவிர அனைத்து நாடுகளும் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் சடலங்களைப் புதைப்பதற்கு அனுமதித்துள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சிலபிரிவு மக்களுக்கு எதிரான இன உணர்வின் அடிப்படையிலேயே கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் சடலங்களைப் புதைப்பதற்கு அரசு அனுமதி மறுத்துள்ளது என ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார். சடலங்களைப் புதைப்பதால் நிலத்தடி நீர் பாதிக்கப்படும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் எனக் குறிப்பிட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் மஹர சிறைக் கலவரத்தில் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி அவர்களுடைய விவகாரத்தில் மாத்திரம் இது ஏன் பொருந்தவில்லை எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைப் பயன்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றிய அரசு ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-இ)

# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, டிசெ.16

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் தாழங்குடாவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் இருந்து கல்முனை நோக்கிச் சென்ற காரும், மட்டக்களப்பு நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். உயிரிழந்தவர் செங்கலடிப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய தர்சன் என்பவராவர்.

இதன்போது காரின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற-இ)

# சிறைச்சாலைப் பேச்சாளராக சந்தன ஏக்கநாயக்க நியமனம்

கொழும்பு, டிசெ.16

தற்போதைய சிறைச்சாலை ஆணையாளர் (நிர்வாகம் மற்றும் மறுவாழ்வு) சந்தன ஏக்கநாயக்க சிறை மேலாண்மை மற்றும் சிறை மறுவாழ்வு அமைச்சகம் மற்றும் சிறைச்சாலைத் துறையின் அதிகாரபூர்வ பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந் நியமனத்தை சிறைச்சாலை இராஜாங்க அமைச்சர் லொகன் ரத்வத்த வழங்கினார்.

இவர், கண்டி தர்மராஜா கல்லூரியில் கல்வி பயின்றார், மேலும் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள் மற்றும் அமைதி ஆய்வுகளில் உயர் தேசிய டிப்ளோமா மற்றும் பொது நிர்வாகம் குறித்த முதுகலைப் பட்டம் பெற்றவராவார். (ந-இ)

# 3 வேளை உணவு மாத்திரம் போதுமென்று சொல்லவில்லை

கொழும்பு, டிசெ. 16

'வடக்கு தமிழ் மக்களுக்கு மூவேளை உணவு போதும், வேறெதுவும் தேவையில்லை' என்று கடந்த 9ஆம் திகதி உதயனில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தாரெனச் செய்தி பிரசுரமாகியிருந்தது.

இந்தச் செய்தி தொடர்பில் சுற்றுலாத்துறை அமைச்சின் ஊடகப் பிரிவு விளக்கம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அதில், அமைச்சர் யாழ்ப்பாணம் வந்தபோது தமக்கு மூன்று வேளை உணவை சுதந்திரமாக உண்பதற்கும் வாழ்வதற்கும் வழிசமைக்க வேண்டும் என்று மக்கள் கேட்டதாகவே தெரிவித்திருந்தார்.

மூன்று வேளை உணவு மாத்திரம் போதுமென்று அவர் சொல்லவில்லை என, சுற்றுலாத்துறை அமைச்சின் ஊடகச் செயலர் பிரதீப் அனுரகுமார தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஓ)

# சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு புதிய கட்டடம்!

கொழும்பு, டிசெ.16

சட்டமா அதிபர் திணைக்களத்தின் கடமைகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

இந்தப் புதிய கட்டடம் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய மற்றும் நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி மொஹமட் அலி சப்ரி ஆகியோரின் தலைமையில் திறக்கப்பட்டது.

12 மாடிகளைக் கொண்ட இந்தப் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 2016 ஆம் ஆண்டு இடம்பெற்றது.

இந்தக் கட்டடம் 12 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சர்வ மத அனுஷ்டானங்களை அடுத்து. நிகழ்வுகள் இடம்பெற்று உத்தியோகபூர்வமாக கட்டடம் திறக்கப்பட்டது. (ற-இ)

# மெனிங் சந்தையில் மீண்டும் 768 கடைகள்

கொழும்பு, டிசெ.16

பேலியகொட புதிய மெனிங் சந்தையில் 768 கடைகள் நேற்று மொத்த விற்பனை நடவடிக்கைகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளன என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஆயிரத்து 200 மொத்த விற்பனைக் கடைகளில் 768 கடைகளே இவ்வாறு திறக்கப்பட்டுள்ளன.

கடைகளைத் திறந்தவர்களுக்கு 50 வீத கழிவு வழங்க வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்தச் சந்தைகள் மாலை 4 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரை இயங்கவுள்ளன என மெனிங் வர்த்தக சங்கத் தலைவர் லால் ஹெட்டிகே தெரிவித்துள்ளார். (ற-இ)

# தேசிய வனவிலங்கு பூங்காவில் மாடுகளுக்கு புதிய வகை நோய்

பொலநறுவை, டிசெ.16

பொலநறுவை தேசிய வனவிலங்குப் பூங்காவில் உள்ள மாடுகளுக்கு நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் திடீரென 25 மாடுகள் உயிரிழந்தமையால் வனவிலங்குப் பூங்காவில் உள்ள ஏனைய மாடுகளுக்கும் நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என வனவிலங்குத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ் விடயம் தொடர்பில் பொலநறுவை வனவிலங்கு உதவி இயக்குனர் தெரிவித்ததாவது, கடந்த 12ஆம் திகதி தகவல் கிடைத்தது. பல இடங்களில் உயிரிழந்த நிலையில் 25க்கும் மேற்பட்ட மாடுகள் மீட்கப்பட்டன.

இது தொற்று நோய் ஒன்றின் ஆபத்தாக இருக்கலாம். இது தொடர்பில் நாங்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளோம். இந்த நோய்த் தொற்று ஆடு மற்றும் யானைகளுக்கும் பரவும் ஆபத்து உள்ளது - என்றார். (ந-இ)

# சுரைக்காய் முட்டை



பலாங்கொட நகரில் வாராந்த சந்தைக்கு அருகிலுள்ள கடை ஒன்றில் சுரைக்காய் வடிவத்தில் விசித்திரமான கோழி முட்டை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த முட்டை ஊதிய பலூன் போன்ற வடிவத்தில் இருப்பதால் இதன் முட்டையின் புகைப்படங்கள் இணையத்தில் பலராலும் பகிரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந)

# பெண் எம்.பிக்கள் பேரவையின் தலைவராக சுதர்ஷனி



கொழும்பு, டிசெ.16

பெண் நாடாளுமன்ற உறுப்பினர் பேரவையின் தலைவராக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் அதன் உப தலைவர்களாக இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் என நாடாளுமன்ற தகவல் தொடர்புத்துறை தெரிவித்துள்ளது. (வ-இ)

அரசியல்....

களால் பிரதமரிடம் மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் அரசியல் கைதிகளென எவரும் இல்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில மீண்டும் இடித்துரைத்துள்ளார். அவ்வாறு இருப்பார்களாயின் அவர்களில் ஒருவரின் பெயரையாவது வெளியிடுமாறும் சவால் விடுத்துள்ளார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு இன்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் காணொளிமூலம் நடத்தப்பட்டது. இதன்போது, 'இலங்கையில் அரசியல் கைதிகளென எவரும் இல்லை என நீங்கள் கடந்தவாரம் அறிவித்தீர்கள். ஆனால் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறுகோரி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் பிரதமரிடம் மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவை பிரதமரும் ஏற்றுக்கொண்டுள்ளார். சுமார் 80 பேர்வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. இது விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன' என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கையில் அரசியல் கைதிகளென எவரும் இல்லை என்பதனை அரசாங்கத்தின் பேச்சாளர் என்ற வகையில் மிகவும் பொறுப்புடனேயே கூறுகின்றேன். தாம் வகிக்கும் அரசியல் நிலைப்பாட்டால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களையே அரசியல் கைதிகளென விளிக்கலாம். சிங்கப்பூரில் கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்ட பின்னர், கம்யூனிஸ்ட் நிலைப்பாட்டை - சித்தாத்தங்களை கொண்டிருந்தவர்கள் மற்றும் இரகசியமாக அரசியலில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டனர். அவ்வாறானவர்கள்தான் அரசியல் கைதிகள்.

இலங்கையில் 1983ஆம் ஆண்டு ஜே.வி.பி, கம்யூனிஸ்ட் கட்சி, நவசமமாஜக்கட்சி ஆகியன தடைசெய்யப்பட்டன. அக்கட்சிகளின் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் குற்றங்கள் இழைக்கவில்லை. மேற்படி கட்சியில் இணைந்தமை, தலைவராகியமை, கொள்கைகளை முன்னெடுத்தமை ஆகியவற்றுக்காகவே கைது செய்யப்பட்டனர். இப்படியானவர்கள்தான் அரசியல் கைதிகளாவர்.

தமிழர் என்பதற்காக இங்கு எவரும் கைது செய்யப்படவில்லை, தமிழ் கைதிகள் என எவரும் இல்லை. அரசியல் கைதிகளும் இல்லை. பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் இருக்கலாம். குற்றமிழைத்தவர்கள் இருக்கலாம். அவ்வாறான கைதிகளை ஆண் மற்றும் பெண் கைதிகள் என்ற வகையிலும், அவர்கள் இழைத்த குற்றங்களின் அடிப்படையிலும், அனுபவிக்கும் தண்டனை அடிப்படையிலும், வயது அடிப்படையிலுமே வகைப்படுத்தப்பட்டுள்ளனர். மாறாக இன ரீதியாக வகைப்படுத்தபடவில்லை.

80 பேர் இருக்கின்றனர் எனில் அவர்களில் ஒருவரின் பெயரையாவது வெளியிட்டும். அப்போது அது பற்றி ஆராயலாம். எமக்கு தெரியாமல்கூட யாராவது தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா என்பது பற்றி விசாரணை நடத்தி உங்களுக்கும் அறிவிக்க முடியும். எனவே, ஒரு அரசியல் கைதியின் பெயரையும், கைதியின் இலக்கத்தையும் வழங்கட்டும்.

பிரதமரிடம் யார் வேண்டுமானாலும் மனுக்களை கொடுக்கலாம். அதனை ஏற்ற பின்னர் சம்பந்தப்பட்ட துறையிடத்தில் அது ஒப்படைக்கப்படும். அதிலுள்ள காரணிகள் ஆராயப்படும். செய்யமுடியுமா, முடியாதா என்று முடிவெடுக்கப்படும்.

ஆகவே, பிரதமரிடம் மனுவொன்றைக் கையளித்தால், அதில் உள்ளபிரச்சினைகளை, கோரிக்கைகளை அவர் ஏற்றுக்கொண்டு விட்டார் எனவும் அமையாது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் உள்ளனர்.


பயங்கரவாத சந்தேக நபர்கள், தண்டனை அனுபவித்தால் பயங்கரவாதிகள்.

அதனைவிடுத்து அவர்களை அரசியல் கைதிகள் என விளிக்க முடியாது -என்றார்.

(ம-44)

## நினைவஞ்சலி

5 ஆம் ஆண்டு     25 ஆம் ஆண்டு



**நீக்கிலஸ் துரைநாயகம்**

மண்ணில் 18.02.1945
விண்ணில் 26.08.2015

**மேரி மாகிறெற்**


மண்ணில் 15.06.1950
விண்ணில் 16.12.1995

ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
நீவிர் தந்த அன்பின் நிழலில் வாழும் உங்கள்

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**உசன், மிருசுவில்**

## மரண அறிவித்தல்



### திரு. சந்தியாப்பிள்ளை ஆசீர்வாதம்

மாரீசன்கூடல் இளவாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சந்தியாப்பிள்ளை ஆசீர்வாதம் அவர்கள் 15.12.2020 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை இன்னேசியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து மரியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மேரி றீற்றா (றஞ்சிதம்) அவர்களின் அன்புக் கணவரும், அன்ரன் (கனடா), நிர்மலா, அமுதா (ஜேர்மனி), பிறேமினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செபஸ்தியாம்பிள்ளை (இரத்தினம்) அவர்களின் அருமைச் சகோதரரும், மரியமலர் (பூபதி), கயித்தாம்பிள்ளை (பெரியதுரை), மரியதாஸ் (செல்லத்துரை) காலஞ்சென்றவர்களான நட்சத்திரம், ஞானப்பிரகாசம், மேரி திரேசா (பரிமளம்), மரியதாஸ் (துரைராசா) மற்றும் மெரி மதலேனா (நேசம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரெம்சியின் ஆசை ஐயாவும், குணசாந்தினி (கனடா) அருள்நேசன் (ஓய்வுநிலை ஆசிரியர்), ஜெயசிங்கம் (ஜேர்மனி), ரகு (லண்டன்) டன்ஸ்ரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அருட்பணி யூட் அமலதாஸ் (இயக்குநர் ஆரோபணம் இளைஞர் இல்லம், உருத்திரபுரம்) ஜெசி, றொட்னி, ஜோய்ஸ் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், டில்ருஷா, றூபன், அன்ரனிற்றா, ஸ்றெபியா, ஜெரின், ஜெனூசன், ஜெறோனி, ஜெனுசன், ஜெறோன் டமில்ரா, ரான்சியா ஆகியோரின் அன்புப் பேரனும், அசெம்ரா, றொசின்ரா, அமலின்ரா ஆகியோரின் அருமைப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து 16.12.2020 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு, புனித கயித்தார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கயித்தார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாரீசன்கூடல், இளவாலை.**
**தொ.பே:021 225 1826**

**தகவல்:**
**திருமதி நிர்மலா அருள்நேசன்**


## தேவை

தொழிற்சாலை (Factory) ஒன்றை கட்டுவதனை முகாமை செய்வதற்கு அனுபவம் வாய்ந்த Civil Engineer ஒருவர் தேவை. (பகுதி நேரம்)

**தொடர்பு: 076 620 2313**

## வரவேற்பாளர் தேவை
(Receptionist)

யாழ் நகரில் இயங்கிவரும் **Hotel** ஒன்றிற்கு வரவேற்பாளர் தேவை. முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 076 222 0632**


## சேவை நலன் பாராட்டு




யாழ் போதனா வைத்திய சாலையில் 32 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராகவும் விடுதி பொறுப்பு தாதிய உத்தியோகத்தராகவும் கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும்

### திரு. சிவபாக்கியம் சிவயோகன்

அவர்களது சேவையை பாராட்டுவதோடு ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## JAFFNA MEDICAL ASSOCIATION ANNUAL GENERAL MEETING – 2021 NOTICE OF MEETING

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association will be held on Saturday, 30th January 2021 at 11.00 a.m. at the Nursing Training School (NTS) Lecture Hall, Teaching Hospital Jaffna, (THJ) for the following purposes;

01. To receive and consider the Annual report of the committee of Management on the affairs of the company and the statement of accounts for the year ended 31st December 2020 and the report of the auditors thereon.
02. To consider any resolutions proposed by members and committee where due Notice has been given.
03. To elect the committee of management for year 2021.
04. To appoint the auditors of the association and to authorize the committee of Management to determine their remuneration.

By order of the committee of management,

Honorary Secretary
16th December 2020

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களக் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை யாற்றும் **திருமதி வனஜா பகிரதன்** அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி சரோஜினிதேவி சிறிசோமசேகரம்

அவர்கள் 15.12.2020 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

யாழ் மாவட்ட செயலகத்தில் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி வனஜா பகீரதன்** அவர்களின் அன்புத் தாயார்

### சிறிசோமசேகரம் சரோஜினிதேவி

அவர்கள் 15.12.2020 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினை காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது திணைக்கள உத்தியோகத்தர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக்கொள்கின்றோம்.

**யாழ் மாவட்ட மனிதவள அபிவிருத்தி உதவியாளர்கள்/ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.**

# கேள்வி அறிவித்தல்.
# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
# சபை நிதி – 2020

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வடமாகாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. பொதுநிதிச் சுற்றறிக்கை 04/2016(1) ந்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்பு, கட்டிட நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி** 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்' (தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866)**இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 16.00 மணிவரை 16.12.2020 ஆம் திகதியில் இருந்து 29.12.2020 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் இடத்திலிருந்து 16.12.2020 ஆம் திகதியிலிருந்து 29.12.2020 ஆம் திகதி வரையுள்ள வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் **மீளளிக்கப்படாத** கட்டணமாக ரூபா.**2000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 30.12.2020 ஆம் திகதி பி.ப **13.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வி செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது
10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 22.12.2020 ஆம் திகதி பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
11. மேற்படி கேள்வி கோரல் தொடர்பில் வலி கிழக்கு பிரதேச சபையின் பெறுகை குழுவின் முடிவே இறுதியானது. பெறுகை குழுவின் முடிவு தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
12. **கேள்வி ஆவணங்களை வழங்கும்போது கொரோனா (COVID 19) வைரஸ் தொற்றுத்தொடர்பான சுகாதார முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும், கேள்வி ஆவணங்களை பெறவரும்போது கூட்டமாக வருவதை தவிர்த்து ஒருவர் மட்டும் வருகை தரவேண்டும், சுகாதார முற்பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வருகை தர வேண்டும்**

| தொ இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(13)/2/Council/PII /01/2020 | திண்மக்கழிவு தரம் பிரித்தல் நிலையத்தில் சுற்றுமதில்,கேற் மற்றும் வீதி அமைத்தல், நீர்வேலி | 4.01 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 40,150.00 | 27.04.2021 (118 நாட்கள்) |
| 02 | NP/14/41(13)/2/Council/PII /02/2020 | கோட்டைக்காடு 1ம்ஒழுங்கை திருத்தம், கோப்பாய் தெற்கு | 0.64 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 6,500.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 03 | NP/14/41(13)/2/Council/PII /03/2020 | சின்னக்கோவில் வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், கோப்பாய் தெற்கு | 0.81 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 8,150.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 04 | NP/14/41(13)/2/Council/PII /04/2020 | புதிய செம்மணி வீதி திருத்தம் கட்டம் 1, இருபாலை தெற்கு | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,280.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 05 | NP/14/41(13)/2/Council/PII /05/2020 | கத்தோலிக்க பாடசாலை 1ம் வீதி 2ம் குறுக்கு ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் கிழக்கு | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,270.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 06 | NP/14/41(13)/2/Council/PII /06/2020 | கற்பகபிள்ளையார் வீதி 3ம் ஒழுங்கை திருத்தம் கட்டம் 1, உரும்பிராய் வடக்கு | 0.73 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 7,360.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 07 | NP/14/41(13)/2/Council/PII /07/2020 | ஆனந்தகானம் வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், ஊரெழு | 1.42 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 14,250.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 08 | NP/14/41(13)/2/Council/PII /08/2020 | ஊரெழு பிள்ளையார் வீதி திருத்தம் | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,360.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 09 | NP/14/41(13)/2/Council/PII /09/2020 | இராச வீதி 203/ உப ஒழுங்கை திருத்தம் கட்டம் 1, கோப்பாய் தெற்கு | 0.46 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 4610.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 10 | NP/14/41(13)/2/Council/PII /10/2020 | வேம்படி ஞானவைரவர் கோவில் வீதி திருத்தம், நீர்வேலி தெற்கு | 1.16 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 11,610.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 11 | NP/14/41(13)/2/Council/PII /11/2020 | தம்பாகடவை குடியிருப்பு வீதி திருத்தம், வளலாய் | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,310.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 12 | NP/14/41(13)/2/Council/PII /12/2020 | மடத்தடி வீதி 2ம் ஒழுங்கை திருத்தம், அச்சுவேலி தெற்கு | 1.48 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 14,850.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 13 | NP/14/41(13)/2/Council/PII /13/2020 | சித்திரவேலாயுதர் கோவில் வீதி திருத்தம் கட்டம் 1, அச்சுவேலி வடக்கு | 1.39 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 13,940.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 14 | NP/14/41(13)/2/Council/PII /14/2020 | விநாயகர் வீதி திருத்தம், பத்தைமேனி | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9290.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 15 | NP/14/41(13)/2/Council/PII /15/2020 | வேளங்காடு அம்மன் வீதி திருத்தம், கட்டம் 2, வாதரவத்தை | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,260.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 16 | NP/14/41(13)/2/Council/PII /16/2020 | எல்லாளன் வீதி திருத்தம் (மிகுதி வேலைகள்) நிலாவரை | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,340.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 17 | NP/14/41(13)/2/Council/PII /17/2020 | சந்தை ஒழுங்கை திருத்தம், ஆவரங்கால் | 0.94 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,420.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 18 | NP/14/41(13)/2/Council/PII /18/2020 | சிறுவர் பூங்கா திருத்தம், கட்டம் 1, நீர்வேலி | 1.74 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 1,7430.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 19 | NP/14/41(13)/2/Council/PII /19/2020 | ஞானவைரவர் வீதி திருத்தம், கட்டம் 2, சிறுப்பிட்டி கிழக்கு | 8.97 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 89,780.00 | 27.04.2021 (118 நாட்கள்) |
| 20 | NP/14/41(13)/2/Council/PII /20/2020 | கிந்துசிட்டி மாதிரி கிராம வீதி திருத்தம், கட்டம் 2, புத்தூர் மேற்கு | 2.79 | 60 நாட்கள் | C8 அல்லது C9 | 27,980.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 21 | NP/14/41(13)/2/Council/PII /21/2020 | சொக்கன்திடல் ஞானவைரவர் வீதி திருத்தம், கட்டம் 1, புத்தூர் கிழக்கு | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,270.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 22 | NP/14/41(13)/2/Council/PII /22/2020 | அம்மன் கோவில் தெற்கு குடியேற்ற இணைப்பு வீதி திருத்தம், கட்டம் 1, அச்செழு | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,270.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 23 | NP/14/41(13)/2/Council/PII /23/2020 | இருபாலை கிழக்கு வீதி – உதயதாரகை இணைப்பு வீதி திருத்தம், கோப்பாய் தெற்கு | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,310.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 24 | NP/14/41(13)/2/Council/PII /24/2020 | வள்ளியம்மன் முன்பள்ளி ஒழுங்கை திருத்தம், கோப்பாய் தெற்கு | 1.85 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 18,590.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 25 | NP/14/41(13)/2/Council/PII /25/2020 | மகிழடி வீதி திருத்தம், கோப்பாய் வடக்கு | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,330.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 26 | NP/14/41(13)/2/Council/PII /26/2020 | பொக்கனை வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், ஊரெழு | 0.90 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,040.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 27 | NP/14/41(13)/2/Council/PII /27/2020 | சிவன் வீதி - கரந்தன் நீர்வேலி வீதி 4ம் ஒழுங்கை, ஞானவைரவர் வீதி 8ம் ஒழுங்கை, சிவன் 1ம் ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் கிழக்கு | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,320.00 | 28.03.2021 (88 நாட்கள்) |

ம.ப.பா


## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் சபை நிதி - 2020

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 28 | NP/14/41(13)/2/Council/PII /28/2020 | அன்னங்கை வீதி உப ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் மேற்கு | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9270.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 29 | NP/14/41(13)/2/Council/PII /29/2020 | அம்மன் கோவில் பின் வீதி திருத்தம், சிறுப்பிட்டி | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,300.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 30 | NP/14/41(13)/2/Council/PII /30/2020 | விநாயகர் வீதி மற்றும் உப ஒழுங்கைகள் புனரமைப்பு, கல்வியங்காடு | 1.79 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 17,940.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 31 | NP/14/41(13)/2/Council/PII /31/2020 | கல்லூரி வீதி மற்றும் பைத்தோலை 1,2 ஆம் உப ஒழுங்கைகள் திருத்தம், அச்சுவேலி தெற்கு | 1.10 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 11,100.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 32 | NP/14/41(13)/2/Council/PII /32/2020 | விக்னேஸ்வரா வீதி 1,2 ஆம் உப ஒழுங்கைகள் திருத்தம், அச்சுவேலி தெற்கு | 0.92 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,200.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 33 | NP/14/41(13)/2/Council/PII /33/2020 | கந்தவளவு வீதி திருத்தம், ஆவரங்கால் மேற்கு | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,320.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 34 | NP/14/41(13)/2/Council/PII /34/2020 | வேம்பன் வீதி 14, 16 ஆம் ஒழுங்கைகள் திருத்தம், உரும்பிராய் தெற்கு | 1.20 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 12,090.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 35 | NP/14/41(13)/2/Council/PII /35/2020 | கோப்பாய் வீதி 10 ஆம் ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் தெற்கு | 2.84 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 28,420.00 | 27.04.2021 (118 நாட்கள்) |
| 36 | NP/14/41(13)/2/Council/PII /36/2020 | ஞானவைரவர் வீதி 5 ஆம் ஒழுங்கை திருத்தம், நீர்வேலி வடக்கு | 0.72 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 7,240.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 37 | NP/14/41(13)/2/Council/PII /37/2020 | விளான் வீதி 3ம் ஒழுங்கை திருத்தம், நீர்வேலி தெற்கு | 0.70 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 7,080.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 38 | NP/14/41(13)/2/Council/PII /38/2020 | மாதா கோவில் பின் வீதி 2ம் ஒழுங்கை ( அம்புலியப்புல வீதி 9/உப ஒழுங்கை) திருத்தம், கோப்பாய் தெற்கு | 1.12 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 11,290.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 39 | NP/14/41(13)/2/Council/PII /39/2020 | கோண்டாவில் வீதி 133/உப ஒழுங்கை திருத்தம், கோப்பாய் தெற்கு | 1.56 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 15,630.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 40 | NP/14/41(13)/2/Council/PII /40/2020 | வைத்தியசாலை வீதி 2ம் ஒழுங்கை திருத்தம், அச்சுவேலி தெற்கு | 1.42 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 14,260.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 41 | NP/14/41(13)/2/Council/PII /41/2020 | மீன் சந்தை கட்டுமானம், அச்சுவேலி | 8.62 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 86,280.00 | 28.03.2021 118 (88 நாட்கள்) |
| 42 | NP/14/41(13)/2/Council/PII /42/2020 | வாகையடி வீதி 3 ஆம் மற்றும் 17/உப ஒழுங்கைகள் திருத்தம்; உரும்பிராய் வடக்கு | 0.93 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 9,320.00 | 27.04.2021 ( நாட்கள்) |
| 43 | NP/14/41(13)/2/Council/PII /43/2020 | பிள்ளையார் வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், புத்தூர் | 1.61 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 16,150.00 | 28.03.2021 (88 நாட்கள்) |
| 44 | NP/14/41(13)/2/Council/PII /44/2020 | பன்னாலை வீதி திருத்தம், நீர்வேலி வடக்கு | 0.52 | 60 நாட்கள் | C9 அல்லது C8 | 5,200.00 | 28.03.2021 (88 நாட்கள்) |

தியாகராசா நிரோஷ்
தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
யாழ்ப்பாணம்
வடமாகாணம்.

15.12.2020.

## மரண அறிவித்தல்



## இரத்தினம் கணபதிப்பிள்ளை

யாழ். புத்தூரைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் கணபதிப்பிள்ளை நேற்று (15.12.2020) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, யோகேஸ்வரி, யோகேந்திரன், இராஜேந்திரன், புவனேந்திரன், விமலேஸ்வரி, அகிலேஸ்வரி, விமலேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.40, அரசடி வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
**பிறேமராஜன் (மருமகன்) 077 3760 575**
**செல்வன் (பேரன்) 076 2172 498**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
24 . 04 . 1972



மறைவு
16 . 11 . 2020

## அமரர் சொக்கநாதன் பிரபாகரன்

**(நாதன் பிரதர்ஸ் உரிமையாளர் கொழும்பு - 11 , 4 ஆம் குறுக்குத் தெரு)**

மன்னவன் போல் வாழ்ந்த நல் வாழ்வில்
மனம்களி கொள்ளவே வைத்தாய்
புன்னகை காட்டிப் பொலிவுற நின்றாய்
பூமுகம் மறைத்தனேன் ஐயோ!
உன்நினை வாலே உயிர்வலி கொண்டோம்
ஓடி நீ போனதெங்கு அறியோம்
இன்னிலை யாலே இராப்பகல் அழுதே
இடரொடு கிடக்கிறோம் இங்கே !
ஒளியுமோ துயரம் ஒன்றியே நிற்கும்
ஓடுதே கண்ணதில் நீராய்
வழியினைக் காட்ட நீயிலை இங்கே!
மண்ணினை நீங்கியேன் போனாய்
அழித்தவன் காலன் பாதகன் பறித்தான்
ஆளுமை கொண்டநின் தோற்றம்
விழியதில் நாளும் நின்றிடத் தானே
வேதனை சூழ்ந்திடும் வாழ்வே!

**குடும்பத்தினர்**
**கேதிஸ் அண்ணா (லண்டன்),**
**அருணன் கொழும்பு மச்சான்**

## மரண அறிவித்தல்



### அம்பலம் கிருஷ்ணபிள்ளை (அம்மான்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்காலிகமாக இணுவில் கிழக்கை வசிப்படமாகவும் கொண்ட அம்பலம் கிருஷ்ணபிள்ளை (அம்மான்) அவர்கள் நேற்று (15.12.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம் இராசம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான வன்னித்தம்பி நாகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் மல்லிகாதேவி, சுப்பிர மணியம் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவகுமார், சுதன், துசியந்தன் (சுவிஸ்), பிரியா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தரூபா, ஜெனனி, சுஜாதா (சுவிஸ்), விதுசன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், தஸ்விகன், அபிஷேக், துசோபிஜா (சுவிஸ்), தூரிஸன் (சுவிஸ்), வைசாலினி (பிரான்ஸ்), வர்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2020) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:குடும்பத்தினர்.**

**மாணிக்கர் வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.**

**சிவா (இலங்கை) 0094778445511
சுதன் (இலங்கை) 0094770531760
துசி (சுவிஸ்) 0041764144721
பிரியா(பிரான்ஸ்) 0033769245900**

## மரண அறிவித்தல்

**தோற்றம் 19 . 04 . 1947**



**மறைவு 15 . 12 . 2020**

### ஸ்ரீசோமசேகரம் சறோஜினி

(முன்னாள் வங்கி ஊழியர்-இலங்கை வங்கி)

புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர் கோவில் வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட ஸ்ரீசோமசேகரம் சறோஜினி (முன்னாள் வங்கி ஊழியர் - இலங்கை வங்கி) நேற்று (15.12.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீசோமசேகரத்தின் அன்புமனைவியும், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் இலக்கணநாயகம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான நடராஜா ஜெயரூபி தம்பதியரின் அன்பு மருமகளும், தனுஷா (ஊழியர்-சம்பத் வங்கி கணக்காய்வுப் பிரிவு), வனஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர், மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களம்- மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயராகவன் (முகாமையாளர்- செலான்வங்கி, நெல்லியடி), பகீரதன் (பிரதி முகாமையாளர்- மக்கள் வங்கி, கன்னாதிட்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சங்கீர்த்தனி, நிந்துஷன், பவஜன், லவஜன் சிவஜனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2020) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**323/8, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**


**தொ.பே: 077 990 1733, 075 922 0336**

# மரண அறிவித்தல்

## நாராயண சுவாமி இராசநாயகம்

**(Advocate M.A.LLB, வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆதீன மகா சபை முன்னாள் தலைவரும் தர்மகர்த்தாவும்)**

**பிறப்பு:15.10.1928 இறப்பு:15.12.2020**



பெருமாள் கோவிலடியை பிறப்பிடமாகவும் தற்போது சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணசுவாமி இராசநாயகம் அவர்கள் நேற்று (15.12.2020) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் சென்னையில் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணசுவாமி லெட்சுமி அம்மாள் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பழனிச்சாமி அலமேலுஅம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான இராஜசேகர், ஜெயந்தி, சுகந்தி மற்றும் பிரபாகர் (மதுரை), ஜீவகர் (சென்னை), உதயசங்கர் (சவுதி), ஆனந்தி (சென்னை), சியாம்சங்கர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற சிவானந்தம் (கொழும்பு) மற்றும் ஸ்ரீரங்கநாதன், காலஞ்சென்ற ஸ்ரீவெங்கடேசன் மற்றும் ஸ்ரீவிவே கானந்தன் (கனடா), ஜெகதீஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் சகோதரரும், ராமநாதன் (இந்தியா) விஸ்வநாதன் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2020) புதன் கிழமை சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**14, ஸ்ரீவேங்கடேசன் வீதி,
பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
நா. ஸ்ரீரங்கநாதன்
தொ.பே:021 222 8333**

### மருதனார்மடம்....

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெறப்பட்ட 114 மாதிரிகள் அநுராதபுரத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன. அவற்றின் பரிசோதனை முடிவுகள் நேற்று மாலை வெளியாகியிருந்தன.

பரிசோதனைகளின் முடிவுகளின்படி 13 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது. உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரி வுக்குட்பட்ட 7 பேருக்கும், தெல்லிப்பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட 3 பேருக்கும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகார பிரிவுக்குட்பட்ட இருவருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் மருதனார்மடம் சந்தையில் வியாபாரம் மேற்கொள்பவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நேற்று நடத்தப்பட்ட பரிசோதனையில் 6 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட அனைவரும் தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மருதனார்மடம் கொரோனா கொத்தணியில் ஏற்கனவே தொற்றுடன் இனங்காணப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

### அளவெட்டி...

பணியாற்றுவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அண்மையில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் மருத்துவமனைக்குச் சென்றுள்ளமை தெரிய வந்ததை அடுத்தே மருத்துவமனை தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் பணியாற்றும் சாரதி ஒருவர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இணுவிலில் இனங்காணப்பட்ட தொற்றாளர் ஒருவருடன் அவர் தொடர்புகளைப் பேணியதை அடுத்தே சுயதனிமைப்படுத் தப்பட்டுள்ளார்.

அவருடன் பணியாற்றும் சிலரும் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். சாரதிக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும், அதன்பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-26)

### மருதனார்மடம்...

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம் உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் அடையாளம் காணப்பட்ட முதலாவது தொற்றாளியைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 39 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள். இவர்கள் உடுவில் பிரதேச செயலகப் பகுதியில் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் ஏனைய பிரதேச செயலக பிரிவுகளிலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தமது நாளாந்த தேவைகளுக்காக உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்கள் மட்டுமன்றி ஏனையோரும் மருதனார்மடம் பொதுச் சந்தைக்கு செல்வது வழக்கமான ஒன்றாகும். கடந்த இரண்டு கிழமைகளுக்குள் மருதனார்மடம் பொதுச் சந்தைக்கு பொருள்கள் வாங்குவதற்கு சென்றவர்கள் தங்கள் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினருடன் (சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர்) அல்லது கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு தம்முடைய தகவல்களை தெரிவிப்பதுடன் சமூகத் தொற்றை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனையும் செய்து கொள்ள முடியும்.

அவ்வாறு தகவல் வழங்குவதில் ஏதும் சிரமங்கள் இருப்பின் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் அவசர அழைப்பெண்ணான 012 222 6666 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் சந்தேகங்களுக்குரிய விவரங்களை தெரியப்படுத்துவீர்களாயின் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும், சமூகத்தையும் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாக்க முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன் -என்றுள்ளது. (ஒ.5)

### 23ஆம் திகதி...

23ஆம் திகதி ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 3ஆம் திகதி வரை இந்த விடுமுறை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலையில் வடக்கு மாகாணம் உட்பட பல இடங்களில் பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன. (ம-இ)

### சமூகத் தொற்றை...

களுக்குள் மாத்திரமின்றி சமூகம் முழுவதும் பரவி வருகின்றது. இனியாவது இந்த உண்மையை அரச தரப்பினர் உட்பட அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு இலங்கையிலுள்ள பிரதான வைரஸ் தொடர்பான நிபுணரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் உலகத்தில் பரவி வரும் புதிய வைரஸ் என்பதால், அதனை எதிர்கொள்ளும் நோய் எதிர்ப்பு சக்தி மனிதர்களிடம் இல்லை.

இந்த வைரஸ் இலங்கையில் சமூகம் முழுவதும் பரவி உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள சிலர் விரும்பவில்லை. எனினும் உண்மையை எதிர்கொண்டு அதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்றியவர்களில் 80 வீதமானவர்களுக்கு எந்த நோய் அறிகுறிகளும் தென்படுவதில்லை என்பது உறுதியாகி இருக்கின்றது- என்றார். (எ-22)

### மக்கள்....

அதேநேரம் கொரோனா வைரஸ் தொற்று அபாயத்தால் நாட்டில் மேலும் இரு இடங்கள் முடக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றிரவு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

பாணந்துறையிலுள்ள அளுபொத்த என்ற இடமும், மொனறாகலை மாவட்டத்திலுள்ள படல்கும்புர என்ற இடமும் நேற்றிரவிலிருந்து மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் இந்த மாதத்திலும் இருக்கக்கூடும். அடுத்த மாதமளவில் அதைப் பெரும்பாலும் கட்டுப்படுத்த முடியும்.

கொரோனா பரவிய ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை நல்ல நிலைமையில் இருக்கின்றது. சுகாதாரத் துறையினர் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் அர்ப்பணிப்பு காரணமாகவே கொரோனாவை இந்தளவுக்குக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது. இந்த நிலையில், முழு நாட்டை முடக்க எதிர்பார்க்கவில்லை. எனினும் நாட்டுக்குள் பெரியளவில் வைபவங்களை எவரும் நடத்த முடியாது - என்றார். (எ-22)

### உயர்நீதிமன்றில்...

டுப்படுத்த உடனே 9 தீயணைப்பு வாகனங்களுடன் கொழும்பு தீயணைப்புப் பிரிவு களமிறங்கியது. பலத்த போராட்டத்துக்கு மத்தியில் தீப் பரவல் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என கொழும்பு தீயணைப்புப் பிரிவு நேற்றிரவு தெரிவித்தது.

மின் ஒழுக்கு காரணமாகத் தீ பரவியிருக்கக் கூடும் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். எனினும், தீப் பரவலுக்கான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

தீ விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக 3 சி.ஐ.டி. குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பிரகாரமே விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. தீ முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தின் ஆவணக் காப்பகத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. இதனால் வழக்குகளுடன் தொடர்புடைய ஆவணங்கள் தப்பின.

உயர்நீதிமன்றத்தின் கழிவுப் பொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பகுதியிலேயே தீ பரவியுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-22)

### ஆவணங்களுக்கு..

வில்லை என நீதி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பீ.கே.மாயாதுன்ன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை ஊடாகவே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தீயால் உயர்நீதிமன்றத்திலுள்ள எந்தவொரு அலுவலகத்துக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை.

உயர்நீதிமன்றம் அமைந்துள்ள பகுதியின் பிரதான கட்டடத்துக்கு வெளியிலுள்ள கட்டமொன்றில் வைக்கப்பட்டிருந்த கழிவுப் பொருள்களிலேயே இந்தத் தீ பரவியுள்ளது.

இந்தக் கழிவுப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த கட்டம் மாத்திரமே தீயால் சேதமடைந்துள்ளது. எவ்வாறாயினும், தீ முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தீ பரவியமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. அரச பகுப்பாய்வு திணைக்களத்தின் அதிகாரிகளிடமும் விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன - என்றார். (எ-22)

### வீழ்ந்து...

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான பிரி6 பயிற்சி விமானம் ஒன்று விழுந்து நெருங்கியுள்ளது. விமானத்தைச் செலுத்திச் சென்ற விமானி உயிரிழந்துள்ளார்.

கந்தளாய் ஜனரஞ்சன குளத்துக்கு அருகில் இந்த விமானம் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. காலையில் பறப்பை மேற்கொண்ட இந்த விமானத்தின் தொடர்பு திடீரெனத் துண்டிக்கப்பட்டது. அதையடுத்து நடத்தப்பட்ட தேடுதலில் விமானம் வீழ்ந்து நொருங்கிய நிலையில் மீட்கப்பட்டது. விமானி மீட்கப்பட்டு திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். உயிரிழந்தவர் ருவென்வெல்ல பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டது. விபத்துக்கான காரணம் தெரியவரவில்லை. இந்த விபத்துத் தொடர்பாக ஆராய்வதற்கு விமானப் படை தளபதியால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

### 2021 மார்ச்சுக்குள்...

பார்க்கின்றது. தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்காக கட்சித் தலைவர்கள் கூட்டமொன்று நடத்தப்படவுள்ளது. இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

மாகாணசபைத் தேர்தலை நடத்தும் முறைமை குறித்து நீண்டகாலமாகக் கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன. தேர்தல் முறைமை மாற்றம் என்ற போர்வையில் கடந்த ஆட்சியின்போது மாகாண சபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. தேர்தலை எதிர்கொள்வதற்கு ஏற்பட்ட அச்சத்தாலேயே எல்லை நிர்ணயம், பெண் பிரதிநிதித்துவம் உட்பட பல விடயங்களை ஆயுதமாகப் பயன்படுத்தி திட்டமிட்ட அடிப்படையில் அது பிற்போடப்பட்டது.

விரைவில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டது. கட்சித் தலைவர்களுடன் நடைபெறும் கலந்துரையாடலின் பின்னர் எட்டப்படும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மீண்டும் அமைச்சரவை பத்திரமொன்றை முன்வைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு முன்வைக்கப்படும் யோசனை குறித்து அமைச்சரவையும் ஆராய்ந்த பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும். மார்ச் மாதத்துக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். அதனை அடிப்படையாகக்கொண்டே பேச்சு இடம்பெற்றன என்றார். (ப-44)

### நேற்றும்....

கொழும்பு, டிசெ.16

இலங்கையில் நேற்றும் 643 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் (மினுவாங்கொட, பேலியகொட, சிறைச்சாலை கொத்தணிகள்) இதுவரையில் 30 ஆயிரத்த 459 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 34 ஆயிரத்து 121 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 24 ஆயிரத்து 867 பேர் குணமடைந்துள்ளனர். 9 ஆயிரத்து 100 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

# அடுத்த ஆறு மாதங்களுக்கு கொரோனா தாண்டவமாடும்!!

## பில்கேட்ஸ் எச்சரிக்கை

வொஷிங்டன், டிசெ.16

**அடுத்த ஆறு மாதங்களுக்கு கொரோனாத் தொற்றின் தாக்கம் மிக மோசமாக இருக்கும் என பில்கேட்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஸ்தாபகரும் உலகின் மிகப்பெரிய செல்வந்தர்களில் ஒருவருமான பில் கேட்ஸ் ஹபில் அண்ட் மெலிண்டா கேட்ஸ் பவுண்டேசன் என்ற அறக்கட்டளையின் இணைத் தலைவராகவும் உள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசிகளை உருவாக்கும் பணிக்கு இந்த அறக்கட்டளை நிதி உதவி அளித்து வருகிறது. இந்த நிலையில், பில்கேட்ஸ் அண்மையில் ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில், அடுத்த 4 முதல் 6 மாதங்களுக்கு கொரோனாத் தொற்றின் தாக்கம், மிக மோசமாக இருக்கும். ஐ.எச்.எம் என்ற சுகாதார நிறுவனம், மேலும் 2 லட்சம் பேர் கொரோனாவுக்கு பலியாவார்கள் என்று கணித்துள்ளது.

ஆகவே, முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியைப் பின்பற்றுவது போன்ற விதிமுறைகளை பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு செய்தால், பெருமளவு உயிரிழப்புகளை தவிர்க்கலாம் என அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)



## இந்தியாவில் கொரோனாப் பாதிப்பு ஒரு கோடியாகின்றது

புதுடில்லி, டிசெ. 16

இந்தியாவில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 99 லட்சத்தைக் கடந்துள்ளது.

இன்னும் ஓரிரு தினங்களில் இந்த எண்ணிக்கை ஒரு கோடி ஆகும் என்று ஏச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நாளுக்கு நாள் கொரோனாப் பாதிப்பு உச்சத்தை அடைந்து வரும் நிலையில், நேற்று இதுவரை இல்லாத அளவுக்கு தொற்றாளர் எண்ணிக்கை பதிவாகியுள்ளது.

நேற்றுக் காலை மத்திய சுகாதாரத்துறை வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் 99 இலட்சத்து 6 ஆயிரத்து 165 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 94 இலட்சத்து 22 ஆயிரத்து 636 பேர் குணமடைந்துள்ளனர்.

3 இலட்சத்து 39 ஆயிரத்து 820 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-வஇ)

## ஸ்புட்னிக் தடுப்பூசியே மிகவும் பாதுகாப்பானது

### வெனிசுலா ஜனாதிபதி சான்றிதழ்

கரஸ்கஸ், டிசெ. 16

உலகில் இதுவரை உருவாக்கப்பட்டுள்ள கொரோனாத் தடுப்பூசிகளில் ரஷ்யா உருவாக்கியுள்ள ஸ்புட்னிக் தடுப்பூசியே மிகவும் பாதுகாப்பானது என்று வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மடுரோ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஏனைய கொரோனா தடுப்பூசிகள் 4 மாதங்களுக்கு மட்டுமே நோய் எதிர்ப்பு சக்தி நீடிக்கச் செய்யும். ஆனால், ஸ்புட்னிக் தடுப்பூசி 2 ஆண்டுகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை நீடித்து வைத்திருக்கும். சோவியத் யூனியன் உருவாக்கிய தடுப்பூசிகள், உலகம் முழுவதும் தீவிர நோய்களை குணப்படுத்தி உள்ளன. சோவியத் யூனியனின் வாரிசான ரஷ்யாவும் அதே அனுபவத்தைப் பயன்படுத்தி, இந்த தடுப்பூசியை உருவாக்கி உள்ளது. வெனிசுலா மக்களுக்கு செலுத்த ஏப்ரல் மாதம் ஸ்புட்னிக் தடுப்பூசி கிடைக்கும் என்றார். (ம-வ,இ)




## வெற்றிபெற்றார் ஜோ பைடன் உத்தியோகபூர்வ அறிவிப்பு!

வொஷிங்டன், டிசெ. 16

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்றுள்ளமையை அமெரிக்கத் தேர்தல்கள் கல்லூரி உறுதிப்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் கல்லூரி எனப்படும் தெரிவாளர்கள் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் 50 மாகாணங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்டுள்ள 538 தெரிவாளர்கள் குழுவினர் வாக்களித்தனர்.

இதன்படி ஜோ பைடனுக்கு 306 வாக்குகளும் டொனால் ட்ரம்புக்கு 232 வாக்குகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. வாக்களிக்கப்பட்ட சிறிது நேரத்தில் பைடனின் வெற்றியை தேர்தல் கல்லூரி உறுதிசெய்துள்ளது. (ம-வஇ)

## அமெ. கொரோனாப் பலி 3 லட்சத்தைக் கடந்தது

நியூயோர்க், டிசெ. 16

அமெரிக்காவில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3 லட்சத்தைக் கடந்துள்ளது என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சீனாவின் வுகான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஆரம்பமான கொரோனா வைரஸ் பரவல் தற்போது உலகின் 218 நாடுககளுக்குப் பரவி பெரும் மனித பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

கொரோனாப் பரவலில் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது. தற்போதைய நிலவரப்படி, அமெரிக்காவில் ஒரு கோடியே 69 லட்சத்து 43 ஆயிரம் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனாவால் இதுவரை 3 லட்சத்து 8 ஆயிரத்து 89 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த வாரத்தில் மட்டும் தினமும் சராசரியாக 2 ஆயிரத்து 403 பேர் உயிரிழந்துள்ளனர். அதாவது, 40 வினாடிக்கு ஒரு நபர் என்ற விகிதத்தில் உயிரிழப்பு பதிவாகியுள்ளது. (ம-வஇ)

அழைப்பு

MAGNO

BRANDED

திறப்பு விழா

காலம் : 16.12.2020
நேரம் : பி.ப. 3.00 மணி
இடம் : இல.443,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சிவன் கோவில் அருகாமை)

16.12.2020 - 31.12.2020 வரை அன்பளிப்பாக
50% விலைக்கழிவில் ஆடைகள் விநியோகிக்கப்படும்.

Branded promotion special discount
எதிர்வரும் 2 வாரங்களுக்குள் Magno.lk
இணையத்தளம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு
077 476 1495, 077 559 0495, 077 670 1495
agashtextiles@gmail.com

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்
ஆகாஸ் ரெக்ஸ்டைல்ஸ் (வ-து),
மீசாலை.

MAGNO
TEXTILE